# ஜன தாக்ஷன செய்திகள்

நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியின் பொருட்டு பொருத்தமான தொழில்நுட்பப் பாவனை சம்பந்தமான பிரக்டிகல் ஆக்சன் நிறுவனத்தின் காலாண்டு செய்திமடல்
2006 - பகுதி : 2 தொகுதி 4



# அபிவிருத்தி நடவடிக்கைகள் விபத்துக்களாக மாறிவிடின்?.

வீதிகள் அமைக்கப்படும்போது கருங்கற்களைத் தகர்ப்பதற்கு வெடிமருந்து பாவிக்கப்பட்டது. இதனால் நிலத்தில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டன. அந்தக் வெடிப்புக்களினூடாக பெருந்தொகையான நீர் நிலத்திற்குள் ஊடுருவிச்சென்றது. இதனாலேயே முன்னொருபோதும் இல்லாதவாறு இந்த வீதி மண்சரிவுடன் அள்ளுண்டு சென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இரண்டு வருடங்களுக்கு முன் இந்த நாட்டைப் பெரிதும் தாக்கியழித்த சுனாமி அனர்த்தங்களின் பினனர் அனர்த்த முகாமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றி அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஊடகம் உட்பட அனைத்து நிறுவனங்களும் நன்கு அறிந்துள்ளன.

இதற்கேற்ப, அரசாங்கத்தினால் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமானத்தை உட்படுத்திய நடைமுறைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் ஒரு செயற்பாடே 2005-3 இலக்க விதிக்கேற்ப ஏற்படுத்தப்பட்ட அனர்த்தமுகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிலையமும் ஆகும். இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்த அனர்த்த முகாமைத்துவ நிலையமானது, அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு முன்னரான அனர்த்தங்களைக் குறைப்பதற்கான மற்றும் சேதங்களைக்குறைப்பதற்குமான ஆயத்த ஏற்பாடுகளையும் உயர்மட்டரீதியில் மேற்கொண்டுவருகிறது.

அனர்த்த முகாமைத்துத் துறையிலே மட்டும் பல வருட அனுபவங்களைக் கொண்ட ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம், அனர்த்த நடவடிக்கைகளில் சிறந்த முறையில் தம்மை இணைத்து அனர்த்தமுகாமைத்துவ நிலையத்தின் பங்களிப்புடன் பல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதற்கேற்ப வெள்ளப்பெருக்கு, வறட்சி, புயல் முதலியவற்றிற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை மக்களுக்கு அறியப்படுத்தும் பொருட்டு ஹம்பாந்தோட்டை மற்றும் அம்பாரை மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து செயலாற்றிவருகின்றது.

அனர்த்த முகாமைத்துவம் பற்றி மக்களுக்கு அறியப்படுத்தும் நோக்கமாக அனர்த்தங்கள் பற்றிய விடங்களை செய்தித்தாள்களில் மேலதிக இணைப்புக்களாக வெளியிட்டுவருவது இந்த நிறுவனத்தின் இன்னொரு நடவடிக்கையாகும். மேலதிக செய்தி இணைப்புக்கள் யாவற்றையும் சேர்த்து அனர்த்த முகாமைத்துவம் பற்றி நீங்கள் நன்கு அறிந்து கொள்வதற்காக ஜனதாக்ஷன செய்தி மூலம் உங்கள் முன் இதனைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜன தாக்ஷன செய்திகள்

2006 பகுதி 2 தொகுதி 3



வெளியீடு
ப்றக்டிக்கல் எக்சன்(ஐ.ரி.டீ.ஜீ)

ஒருங்கிணைப்பு
தனுஷி சேனநாயக்க
ஜனத் கீகணகே
தருகா திஸாநாயக்க

ஆசிரியர் குழு
தருகா திஸாநாயக்க
தம்பிஜயா சிவராஜா
ரமித விஜேதுங்க

தமிழாக்கம்
ஜனத் கீகணகே

வரைபடங்களும் பக்க
வடிவமைப்பும
தினேஸ் பிரதீப்
பிரபோத அபயவர்தன

புகைப்படங்கள்ப்றக்டிக்கல்
எக்சன்(ஐ.ரி.டீ.ஜீ)
உத்தியோகத்தர்கள்
அனுறுத்த லொக்குஹப்பு
ஆராய்ச்சி



ப்றக்டிக்கல் எக்சன்
இல. 5, லயனல்
எதிரிசிங்க மாவதத
கொழும்பு 5

தொ.பே. : 011 - 2829412
தொ.ந. : 011 - 2856188

மின்னஞ்சல் : srilanka@practicalaction.org.lk

இணையம் : www.practicalaction.org
www.janathakshan.org




# பொருளடக்கம்


02. இயற்கை அனர்த்தங்கள் பற்றிய அனுபவங்கள்

03. அனர்த்தங்கள் தற்போது தொடர்ந்து வண்ணமிருக்கின்றது

04. அபிவிருத்தி நடவடிக்கைகள் விபத்துக்களாக மாறிவிடின்?.

05. நகரங்களில் பிரயாணங்களுக்கு ஏற்படும் குறுக்கீடுகள்

06. சகலதும் ஏற்படுவது மனிதனுக்கே?.

07. அனர்த்த வாழ்க்கையும் வாழ்வாதாரங்களும்.

08. அனர்த்தங்கள் தொடாந்து கொண்டிருக்கும் காலங்களில் விபத்துக்கள் பற்றிய முன்னெச்சரிக்கை தேவைப்படுகிறது.

09. அனர்த்தங்களை தடுத்துக் கொள்ள முடியுமா

10. மார்கழி 26 ஒரு தினமல்ல






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்தங்கள்

# பற்றிய அனுபவங்கள்





வங்களா விரிகுடாவிற்கு தும்மல் ஏற்படும் போது இலங்கைக்கு சுரம் ஏற்படுகிறது என்று எமது சமூகத்தில் பரவலாகப் பேசப்பட்டு வரும் வாய்மொழியைக் கேட்டிருக்கிறோம். இது ஒரு பேச்சுவழக்காகப் பேசப்பட்டு வருகின்றபோதும் இந்த வாய்மொழியில் ஒரு அர்த்தம் புதைந்து இருக்கத்தான் செய்கிறது. இந்து மகா சமுத்திரத்தில் சிறிய தீவாக விளங்கும் இலங்கைக்கு வங்காள விரிகுடாவில் ஏற்படும் காலநிலை மாற்றங்கள் இலங்கையில் சில பாகங்களுக்கு பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துவது கண்கூடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடர்கள் எப்போதாவது எங்கேயோ அல்லது எப்படியோ அனர்த்தங்களாக மாறிவிடுகின்றன. தொழில்நுட்ப அபிவிருத்தியடைந்த அமெரிக்காவிற்கோ அல்லது இது பற்றிய போதுமான அறிவினைக் கொண்டிராத மக்களைக்கொண்ட சூடான் போன்ற நாடுகளுக்கோ அனர்த்தங்கள் வேறுபட்டுக் காணப்படுவதில்லை.


அதேபோல் அராபிக்கடலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் இந்திய உபகண்டத்தில் உண்டாகும் காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களிலிருந்து விலகியிருப்பதற்கு இந்தச் சிறிய தீவிற்கு இயலாமலுள்ளது. அனர்த்தங்கள் பற்றி ஆராய்ந்துவரும் நிபுணர்கள் இதுவரை கண்டறியப்பட்ட ஆய்வுகளிலிந்து இலங்கையைப் பாதித்த அனர்த்தங்கள் பல உள்ளன என அறியக்கிடைக்கிறது. எம்மைப் பெரிதும் பாதித்துக் கொண்டிருக்கும் பிரதான அனர்த்தங்கள் பற்றி ஆரா்ய்ச்சி செய்வதே எமது தற்போதைய முயற்சியாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறட்சி

எமது நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களில் பிரதான இடத்தைப் பெறுவது வறட்சியாகும். பருவ மழைவீழ்ச்சியைப் பெறுகின்றபோதும் உலர்வலயப் பிரதேசங்களில் வாழ்ந்துவரும் மக்களுக்கு வறட்சியிலிருந்து மீள்வதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாகவே கிடைக்கின்றன. வறட்சி அல்லது இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உலர் வலயப்பிரதேச மக்கள் வருடந்தோறும் வறட்சியின் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். மழை காலங்களைப்போலவே வறட்சி நிலவுங் காலங்களிலும் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. வைகாசியிலிருந்து புரட்டாதி மாதம் வரையான காலம் தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று பெறுங்காலமாகும். தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றுடன் சேர்ந்து வரும் மழையானது அதிகமாகி நாட்டின் மத்திய பிரதேசத்தைப் பெரிதும் பாதிப்படையச் செய்கின்றது. ஏனைய பிரதேசங்களுக்கு குறைந்த மழைவீழ்ச்சியே கிடைக்கிறது. இன்னுஞ் சில பிரதேசங்களுக்கு மிக மிக அரிதாகவே மழைவீழ்ச்சி கிடைக்கிறது.

ஆயினும், அண்மைக்காலத்தில் அதிக எண்ணிக்கையான மக்களைப் பாரிய பாதிப்பிற்குள்ளாக்கிய சம்பவம் 2001 ம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியாகும். இதன்போது ஹம்பாந்தோட்டை மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டதோடு நாடு முழுவதிலும் 370,000 குடும்பங்கள் அனர்த்தத்திற்கு உள்ளாக்கப்பட்டன. 1930 ம் ஆண்டிற்குப் பின்னர் எமது நாட்டில் 1935, 1937, 1947, 1949, 1953 1956, 1965, 1974, 1977,1981,1983,1988,1989 காலப்பகுதிகளிலும்1995 மற்றும் 1996 ம் ஆண்டுகளிலும் குறிப்பிடத்தக்க அளவு வறட்சி ஏற்பட்டுள்ளது என சமூக சேவைகள் திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.



## வெள்ளப்பெருக்கு

தினமும் வெள்ளப்பெருக்கிற்கு முகங்கொடுத்துவரும் இரத்தினபுரி பிரதேச மக்களுக்கு 2002ம் ஆண்டு ஒரு மறக்கமுடியாத ஆண்டாகும். இதன்போது பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டதோடு குறிப்பிடத்தக்க பாரிய அளவில் சொத்து இழப்புக்களும் ஏற்பட்டன. இரத்தினபுரி தினமும் வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்துவரும் ஒரு நகரமாக விளங்குவதோடு கடந்த காலங்களிலும் பின்னைய சந்தர்ப்பங்களிலும் பல வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்த பிரதேசமாகக் காணப்படுகின்றது.
வெள்ளப்பெருக்கானது இரத்தினபுரி நகரை மட்டுமல்ல இன்னும் பல தாழ்நிலப் பிரதேசங்களையும் பாரிய பாதிப்பிற்குள்ளாக்கிய சந்தர்ப்பங்கள் பல எமக்கு நினைவிருக்கலாம். இலங்கையைப் பெரிதும் பாதித்துவரும் வெள்ளப்பெருக்கு வகைகள் மூன்றினை அனர்த்த முகாமைத்துவ நிபுணர்கள் இனங்கண்டுள்ளனர். மழைநீர் அதிவிரைவாக அதிகரித்துப் பெருக்கெடுப்பதால் ஏற்படும் வெள்ளம் அதில் ஒருவகையாகும. குறிப்பிட்ட காலங்களில் ஆற்றுநீர்மட்டம் உயர்வடைவதால் உண்டாகும் வெள்ளப்பெருக்கு இரண்டாவது வகையாகும். மூன்றாவது, திடீர் புயல் காரணமாக ஏற்படும் வெள்ளமாகும். நீர்ப்பாசன திணைக்களத்தின் கூற்றுப்படி 5"-8" வரை ஏற்படும் வெள்ளப்பெருக்கு சிறுவெள்ளப்பெருக்கு எனப்படும்.

அதேபோல் 8"-11" வரை ஏற்படுவது பெருவெள்ளப்பெருக்கு எனப்படும். நீர்ப்பாசனத் திணைக்கள அறிக்கையின்படி 11" க்கு மேல் ஏற்படும் வெள்ளம் பேரபாயத்தை ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கு எனப்படும்.


அதிக வெள்ளப்பெருக்கினால் பாரிய சேதத்தை விளைவிக்கும் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சியானது உலர் வலயத்திலும் எத்தகைய பிரபல்யம் வாய்ந்தது என்பதை இவ்வாறான வெள்ளப்பெருக்கின் அச்சுறுத்தல்களுக்கு இப்பிரதேசம் முகங்கொடுக்கும் சம்பவங்கள் மூலம் அறியக்கூடியதாகவிருக்கிறது. இலங்கையில் ஒரே தினத்தில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சியான 805 மி.மீ மழையைப் பெற்ற பிரதேசம் ஒரு உலர் வலயப் பிரதேசமாகும். அது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நெடுங்கேணிப் பிரதேசமாகும். அத்தோடு மூன்று நாட்களில் அதிக மழைவீழ்ச்சியாகிய 1240 மி.மீ மழையைப் பெற்ற ஹபரணைப் பிரதேசமும் ஒரு உலர் வலயப் பிரதேசமே என அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூறாவளியும் புயற்காற்றும்

சூறாவளி என்பது பெரும்பாலும் பருவப்பெயர்ச்சிக் காற்றுடன் சம்பந்தப்பட்டதாகும், அல்லது வங்காள விரிகுடாவில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலைகளால் உண்டாவதாகும். இலங்கையில் சூறாவளி எனக்கருதப்படுவது மணித்தியாலத்திற்கு 118 கி.மீ. க்கும் அதிகமான வேகத்துடன் வீசும் சுழல் காற்றாகும். மணித்தியாலத்திற்கு 62 117 கி.மீ. வரை வீசும் சுழல் காற்று புயற்காற்று எனப்படும். தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றினால் வறட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படும். அதேவேளை சூறாவளியின் பொருட்டு பெரும்பாலும் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துவது வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காற்றாகும்.

1881-2001 காலப்பகுதியில் இலங்கையைப் பெரிதும் பாதிப்புறச் செய்த சம்பவங்கள் 11 தடவைகள் ஏற்பட்ட சூறாவளி மற்றும் 5 தடவைகள் ஏற்பட்ட புயற்காற்று அனர்த்தங்களே எனவும் அவற்றில் நூற்றுக்கு 85 வீதமானவை மார்கழி மாதங்களிலேயே ஏற்பட்டுள்ளன எனவும் அறியக்கூடியதாக விருக்கின்றது. இதற்கேற்ப, வருடத்தில் இறுதி அரையாண்டே பெரும்பாலும் சூறாவளியினால் பாதிக்கப்படுகின்றது என காலநிலை அவதானிகள் குறிப்பிடுகின்றனர். காலநிலை தொடர்பான ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கணிப்பின்படி 1907 பங்குனி, 1912, 1922, 1966, 1978, 1992 கார்த்திகை, 1908, 1919, 1964, 1967, 2000 மார்கழி மாதங்களில் கடுமையான சூறாவளிக் காற்றினால் இலங்கைக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக அறியக்கிடைக்கிறது. இந்தக்காலப் பகுதிகளில் வருட இறுதி அரையாண்டுப்பகுதிகளிலேயே சூறாவளி ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





## மண்சரிவு

மழை காலங்களில் ஊடகங்கள் ஊடாக பிரபல்யம் கொடுத்து வெளியிடப்படும் அனர்த்தங்களில் பிரதானமானது மண்சரிவாகும். இலங்கையில் மண்சரிவுகள் பூகம்பங்கள் போன்று பாரிய சேதங்களை ஏற்படுத்தாவிட்டாலும் மக்களை பல்வேறு இன்னல்களுக்கு இட்டுச் செல்கின்றன. அதிக மழைவீழ்ச்சி, புவியமைப்பின் தன்மை மற்றும் திட்டமில்லாத மனித பாவனை காரணமாக மண்சரிவுகள் ஏற்படுகின்றன. புவிச்சரிதவியலாளர்களின் கருத்துப்படி மண்சரிவுகளுக்குப் பிரதான காரணமாக அமைவது மலைப்பிரதேசங்களில் உள்ள மக்களின் திட்டமிடப்படாத பொருத்தமற்ற காணிப் பாவனையாகும். வருடாந்தம் 1000 4000 மி.மீ. க்கு இடையில் மழைவீழ்ச்சி பெறும் மலைப்பிரதேசங்களிலேயே மண்சரிவுகள் பெரும்பாலும் ஏற்படுகின்றன. அப்பிரதேசங்களில் மண்சரிவுகளைக் கருத்தில் கொண்டு வீதிகள் அமைத்தல், பயிர்ச்செய்கை மற்றும் இதர அபிவிருத்திகளுக்காக காணிகளை சுத்திகரித்தல், தகுந்த நீர்ப்பாசன வசதிகளற்ற சரிவான பிரதேசங்களை பல்வேறு தேவைகளுக்குப் பாவித்தல் முதலிய நடவடிக்கைகள் மண்சரிவுகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

கடந்த இரு தசாப்த காலமாக இலங்கையில் குறிப்பிடத்தக்க பல மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதோடு அதனால் உயிரிழப்புக்களுக்கும் மேலாக பெருந்தெருக்கள், புகையிரதப் பாதைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் உட்பட பல்வேறு வாழ்வாதார வசதிகளும் பாரிய சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டன. உயிரிழப்புக்கள் 51 மற்றும் பாரிய வாழ்வாதார அமைப்புக்களைச் சேதமடையச் செய்த 1996ல் ஏற்பட்ட மண்சரிவும் 75க்கும் மேற்பட்ட உயிரிழப்புக்களை ஏற்படுத்திய 2003ல் ஏற்பட்ட அலபாத்த மண்சரிவும் இந்நாட்டில் ஏற்பட்ட மண்சரிவுகள் வரலாற்றில் முக்கிய இடங்களைப் பெறுகின்றன. இதனைவிட கொஸ்லந்தையில் ஏற்பட்ட மண்சரிவு இலங்கையில் நிகழ்ந்த அதிபயங்கர மண்சரிவாகக் கருதப்படுகிறது. 1989 ல் மண்சரிவினால் 300 உயிரிழப்புக்கள் எற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலரிப்பும் ஒரு அனர்த்தமேயாகும்



நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட எமது இலங்கை கடலரிப்பிற்கு உள்ளாவது ஒரு புதினமல்லவென எவரும் சிந்திப்பதில் சந்தேகமே கிடையாது. ஆயினும் எமது நாட்டின் கரையோரப்பிரதேசங்கள் பெரும்பாலும் பாரிய அலைகளின் தாக்கங்களிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்வதற்கு அப்பிரதேசங்களில் காணப்படும் சுண்ணக்கல் மற்றும் பவளப்பாறைகள் நெடுங்காலமாக பெரிதும் உதவுகின்றன. ஆனால் கட்டுப்பாடற்ற மனித செயற்பாடுகள் இந்த சுண்ணக்கல் மற்றும் பவளப்பாறைகளின் ஆயுட்காலத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. இதனாலேயே அதிக அளவில் கடலரிப்புக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் நதி வீழும் முகத்துவாரப் பிரதேசங்களில் மணல் அகழ்வு நடவடிக்கைகளும் கடல் அபிவிருத்திக்கு தடையை ஏற்படுத்தும் இன்னொரு பிரதான காரணியாகும்.

அண்மைக்கால அறிக்கையிடப்படாத தகவல்களின்படி வருடாந்தம் 1.1 மீற்றர் வரையான கரையோரப்பிரதேசம் கடலினுட் சென்றுவிடுவதாகவும் 0.5 மீற்றர் வரையான பிரதேசமே கரையோரப் பிரதேசத்தினுட் சேர்கின்றது எனவும் அறியக் கிடைக்கிறது. இந்த புள்ளிவிபரத்திற்கேற்ப தென்மேல் கரையோ்ரப் பிரதேசத்தில் 658 மீற்றர் பகுதியில் வருடத்திற்கு 175000 மீற்றர் வர்க்கம் தொடக்கம் 285000 மீற்றர் வர்க்கம் வரையான நிலப்பகுதி இழக்கப்படுகிறது எனக் காணக் கூடியதாகவிருக்கிறது. குடலரிப்பு அதிகமாக ஏற்படும் பிரதேசமாக புத்தளத்திலுள்ள மஹஓயாப் பிரதேசம் இனங்காணப்பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் வருடத்திற்கு 3 4 மீற்றர் வரையான கடலரிப்பு ஏற்படுகிறது எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

# அனர்த்தங்கள் தற்போது தொடர்ந்த வண்ணமிருக்கின்றது

மழையை நாம் எதிர்பார்த்திருந்தாலும் தற்போது எமக்குத் தேவைப்படும் காலங்களில் மழை கிடைப்பதில்லை. மழை பெய்யும்போது அது எல்லை கடந்தும் சென்றுவிடுகிறது. அது தொடர்பாக சாதாரண மக்கள் சில எண்ணக்கருத்துக்களை வைத்திருந்தாலும் காலநிலை வேறுபாடுகள் அவற்றை மாற்றிவிடுகின்றன. இலங்கையில் இப்பிரச்சனை பெரிய அளவில் காணப்படாவிட்டாலும் உலகில் ஏனைய பாகங்களில் இன்று அரசியல் மற்றும் விஞ்ஞானம் போன்ற துறைகளிரண்டிலும் அக்கறை காட்டப்படும் விடயம் ஒன்று இருப்பின் அது உலக காலநிலை பற்றியது தான். கைத்தொழில் பெறுபேறுகள் மேலே மேலே உயர்ந்து சென்றுள்ளது. காபனீரொட்சைட் போன்ற வாயுக்கள் காரணமாக இதுவரை உலகின் காலநிலை பல்வேறு விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு அதன் பயனாக பல சந்தேகமற்ற பெறுபேறுகளை இதுவரை பெறக்கூடியதாவிருக்கிறது.

இந்த வேறுபாடுகள் இலங்கை மட்டுமல்ல முன்னேற்றமடைந்த அமெரிக்காகூட உணர ஆரம்பித்துள்ளது. நாம் சில வருடங்களுக்கு ஒரு தடவை ?எல் நினோ? தன்மையுடன் காணப்படும் வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற உபத்திரவங்களுக்கு வழமையாக முகங்கொடுத்து வருகிறோம். இந்த சம்பவம் எம்மைத் தாக்குவது சாதாரண காலநிலையில் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு எல்லைக்குள் வெகுவிரைவாக பெரும்பிரபல்யப்படுவதாலேயாகும். இதன் காரணமாக சில குறிப்பிட்ட காலங்களில் உண்டாகும் சிறிய அளவிலான வறட்சி நிலைமையும் பாரிய வறட்சியாக மாறிவிடுகிறது. பொருத்தமான காலங்களில் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாவிடின் பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுவிடுகிறது. அமெரிக்காவில் வருட இறுதியில் சாதாரணமாக ஏற்பட்ட சுழல்காற்று விரிவடைந்து ?கத்ரினா? என்ற பாரிய சூறாவளியாக மாறியது யாவரும் அறிவர். எனவே, அசாதரணமாக ஏற்படும் உக்கிர காலநிலை மாற்றங்களை காலநிலை அவதான நிலைய நிபுணர்கள் இனங்கண்டு அறிவிக்கின்றனர். இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களை நோக்குவோமாயின் அவை ஏற்படும் வரை இலங்கையில் பல விசேடமான காலநிலைமாற்றங்கள் காணப்பட்டன. இது பற்றி குறிப்பிடும் எமது காலநிலை அவதான நிபுணர்கள் தெரிவிப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதெனில், தாம் எதிர்பார்த்ததையும்விட நுவரேலியா போன்ற பிரதேசங்களின் காலநிலை மாற்றங்கள பெரிதும் வேறுபட்டுக் காணப்பட்டன என்பதாகும். இதனால், எம் நாட்டு மழைவீழ்ச்சி மாற்றங்கள் ஏற்படும்போது ஏதாவது பாரிய மாறுதல்கள் ஏற்படுகின்றது என காலநிலை அவதான நிலையம் கூறுகிறது. இதனால் எங்களுக்கு ஏற்படும் காலநில மாற்றங்களின் பாதிப்புக்கள் சிறியன அல்ல. விவசாயம் மற்றும் சுகாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் மிக அதிகமாகும். இதற்குச் சிறந்த உதாரணம் நுவரேலியா ஆகும். நுவரேலியா கிழங்குச்செய்கை மற்றம் மரக்கறி, தேயிலைச் செய்கைக்கு மிக உகந்த காலநிலை கொண்ட பிரதேசமாகும். எனினும் வெப்பநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு உட்பட்ட காலநிலை மாற்றங்களினால் அப்பிரதேச விவசாயம் நன்கு பாதிக்கப்படுகிறது. இம்மாற்றங்கள் இந்நாட்டு விவசாயத்திற்கு மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்துகிறது என பேராதனை விவசாயபீட இயற்கைவள முகாமைத்துவ நிலையம் நிரூபித்துள்ளது. அத்துடன், எதிர் பார்க்கும் காலங்களில் மழைவீழ்ச்சி காணப்படாத காரணத்தால் இந்நாட்டில் காலபோகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முன்னரிலும் பார்க்க தற்போது பாரிய பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்களினால் பாரிய நோய்களும் அதிகரிக்கின்றன. இந்த நாட்டில் கடல் மட்டத்திலிருந்து உயர்ந்த பிரதேசங்களின் உஷ்ணநிலை காரணமாக முற்காலத்தில் நுளம்புத் தொல்லை குறைவாகவே காணப்பட்டது. தற்போது சிந்திக்கமுடியாத அளவு சீதோஷ்ண வேறுபாடுகளின்று சகல பிரதேசங்களிலும் நுளம்பு பெருகுவதற்கு ஆரம்பித்துள்ளது. இந்த நுளம்புப்பெருக்கத்தினால் ஏற்படும் தொற்று நோய்கள் சகல பிரதேசங்களுக்கும் பரவுவதைத் தடுப்பதற்கான விபரங்களை அறியவேண்டியது அவசியமாகும். அத்துடன் வேறு பல தொற்று நோய்களும் இக்காலநிலை மாற்றத்தினால் அதிவிரைவில் பெருகிவிடுகிறது. இத்தகைய காலநிலை மாற்றங்களினால் இந்த நோய் பரவும் நிலை இரட்டிப்பாகியும் விடுகிறது. வெள்ளப்பெருக்குக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களும் தொற்றுநோய் பரவலுக்கு மிகவும் உதவிபுரிகின்றன. அத்துடன் எல்லையில்லாமல் ஏற்பட்டு வரும் அன்ர்த்தங்கள் காரணமாக மக்களின் வாழ்வாதார மார்க்கங்கள் பெரிதும் தடைப்பட்டுவிடுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னெச்சரிக்கை தேவைப்படுகிறது.

தற்கால உலகில் அனர்த்தங்கள் பற்றி மக்களுக்கு முன்னெச்சரிக்கை முறைமையினை அறியப்படுத்துவது மிக அவசியமான-தாகும். கடந்த சுனாமிப் பேரலைத் தாக்கத்தின் பின்னர் இந்த முன்னெச்சரிக்கை முறைமை பற்றி நாம் யாவரும் நாள்தோறும் சம்பாஷித்துக் கொண்டிருப்பது சகலருக்கும் நினைவிலிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

சுனாமி அனர்த்தம் சம்பந்தமாக ஓரளவு உயர் தொழில்நுட்பம் தேவைப்படுகிறது என்பதை அறிந்திருந்த எமக்கு அடிக்கடி ஏற்பட்டுவரும் அனர்த்தங்களாகிய வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற சம்பவங்களின்போது உரிய மாற்றுநடவடிக்கைகள் மூலம் வினைத்திறனுடனான முன்னெச்சரிக்கை முறைமை ஒன்றினை எமக்கு ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்பதை எமது பிராந்தியத்திலேயே நிரூபித்துக்காட்டப்பட்டுள்ளது. இந்த உதாரணம் பாகிஸ்தானிலிருந்தே அறியக்கூடியதாவிருந்தது. அதுவும் வெள்ளப்பெருக்கு சம்பந்தப்பட்டதே. பாகிஸ்தானில் கம்றா பிரதேசமே வெள்ளப்பெருக்கினால் மூடப்பட்டுவிடுகிறது என பிரதேச நிர்வாகிகளிடமிருந்து அறியமுடிகிறது. கிராமத்திற்குள் செல்லும் வீதிகள் பல தடவைகள் நீரில் மூழ்கிவிடுவதால் வருடந்தோறும் இக்கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுவிடுகிறது. இதற்கு மாற்றுவழியைத் தெரிவுசெய்யும்பொருட்டு ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் அந்நாட்டிலுள்ள டோபா நிறுவனத்துடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவத

திட்டமொன்றினை ஆரம்பித்தது. இக்கிராமம் அடிக்கடி தனிமைப்படுத்தப்பட்டுவிடுவதால் அம்மக்களின் உற்பத்திப்பொருட்கள் சந்தைப்படுத்துவது, பாதுகாப்பான இடங்களுக்கு அவர்கள் இடம்பெயர்வது போன்ற பாதிப்புப் பிரச்சனைகள் காணப்படுவதால் கிராமத்திற்கு ஒரு பாலம் அமைக்கப்படவேண்டும் என முதலில் பிரதானமாகக் கருதப்பட்டது. இந்த அமைப்பினால் வெள்ள அனர்த்தங்களின்போது நகரங்களுக்கிடையேயான தொடர்பு ஏற்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை அயலிலுள்ள ஆலயங்களிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்காக பொறுப்பு வாய்ந்த நபர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி நதிகளின் நீர்மட்டம், மழை மற்றும் காற்றின் வேகம் என்ற தகவல்களைத்திரட்டி அந்த தரவுகளினடிப்படையில் பாதிப்புற்ற மக்களுக்கு முன்னெச்சரிக்கை முறைமை மூலம் தெரியப்படுத்தலே அவர்களின் கடமையாகும். இத்தகைய வெள்ள அபாயங்களின்போது ஆலயங்களில் ஒலி எழுப்பும் கருவிகளை அமைத்து அதன்மூலம் மக்களுக்கு முன்னெச்சரிக்கை முறைமை மூலம் விழிப்படையச்செய்கிறார்கள். தற்போது கம்றா மக்களும் தமக்குத்தாமே தங்கள் பயிர்ச் செய்கைக்கு ஏற்படும் பாதிப்புக்களை இந்த நடைமுறைகள் மூலம் தவிர்த்துக்கொள்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிவிருத்தி நடவடிக்கைகள் விபத்துக்களாக மாறிவிடின்?.

வீதிகள் அமைக்கப்படும்போது கருங்கற்களைத் தகர்ப்பதற்கு வெடிமருந்து பாவிக்கப்பட்டது. இதனால் நிலத்தில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டன. அந்தக் வெடிப்புக்களினூடாக பெருந்தொகையான நீர் நிலத்திற்குள் ஊடுருவிச்சென்றது. இதனாலேயே முன்னொருபோதும் இல்லாதவாறு இந்த் வீதி மண்சரிவுடன் அள்ளுண்டு சென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம்பளை நுவரேலியா வீதியில் பாறதெக்க பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவின் பின்னர் அந்த அயலிலுள்ள வர்த்தகர் ஒருவர் ஊடகங்கள் மூலம் இதனையே கூறிக்கொண்டிருந்தார்.

எங்கள் வீடு ஒருபோதும் நீரில் மூழ்குவது கிடையாது. கட்டுநாயக்க அதிவேக வீதி அமைக்கப்பட்டபோது அருகிலுள்ள தாழ்நிலங்கள் நிரப்பப்பட்டதன் பின்னரே இந்தப் பிரச்சனைகள் யாவும் எழுந்துள்ளன என ஜா-எல வைச்சேர்ந்த ஒரு இளம்பெண் கூறிக்கொண்டிருந்தார். அவரது வீடு மட்டுமல்ல கொழும்பு கட்டுநாயக்கா வீதி முழுவதும் நீரில் மூழ்கியதையடுத்து சில விமானப்பயணிகளுக்குக்கூட அவர்களது பயணங்கள் பாரிய பிரச்சனைகளாகக் காணப்பட்டன. கொழும்பு, கம்பஹா போன்ற தாழ்நிலப்பிரதேசவாசிகளும் இத்தகைய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட அதேவேளை மலைநாடுக-ளில் ஏற்பட்ட மண்சரிவுகள் பலவற்றுக்கு அங்குள்ள மக்கள் முகங்கொடுக்க நேரிட்டது.

கடந்த சில வாரங்களாகப் பெய்துவரும் கடும் மழைகாரண-மாக நாட்டின் பல பாகங்களிலுமுள்ள மக்கள் பாரிய பாதிப்புக்களுக்குள்ளாகினர். கண்டி நுவரேலியா வீதியில் பாரிய மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. ஒருபுறம் வீடு, இன்னொரு புறம் வீதிகள், வாகனங்கள் முதலியனவும் மண்சரிவுக்கு இலக்காகி மண்ணினுள் புதையுண்டன. கண்டி குருணாகல் வீதியிலும் இடத்திற்கிடம் பல்வேறு மண்சரிவுகள் ஏற்பட்டதோடு கண்டி பதுளை வீதியிலும் இத்தகைய பல ஆபத்துக்கள் ஏற்பட்டன. ஒருபோதுமில்லாதவாறு கம்பஹா மாவட்டமும் கொழும்பு பிரதேசமும் நீரினால் மூழ்கின. மேற்படி வர்த்தகர் மற்றும் ஜா-எல வைச் சேர்ந்த இளம்பெண்மணி ஆகியோர் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்களையும் இவை யாவற்றினுடனும் தொடர்புபடுத்திப் பார்க்கவேண்டும்.

இம்முறை பருவப்பெயர்ச்சிக்காற்று ஆரம்பித்து இரண்டுவாரங்களுக்குள் 60 உயிரிழப்புக்கள் ஏற்பட்டதோடு வீடுகள், சொத்துக்கள் பாரிய அளவில் சேதமடைவதற்குக் காரணமாயிருந்தது இயற்கை அனர்த்தங்கள் அல்ல.

கூறுவோமாயின், இயற்கையில் ஏற்படும் இடர்கள் அனர்த்தங்களாக நீண்டு சென்றிருப்பதற்குக் காரணம் அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் தவறான மனிதசெயற்பாடுகளே என்பதாகும். அபிவிருத்தி நடவடிக்கைகள் அனர்த்தங்களுடன் தொடர்புபட்டே ஏற்படுகின்றன என நாம் காண்கிறோம். கண்டி நகரை அண்மித்த மலைப்பிரதேசங்களில் மண்சரிவு பற்றிய அவதானிப்புக்கள் காணப்படுகின்றன என பூகோள நிபுணர்களால் அனர்த்தங்கள் தொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.

மலைப்பிரதேசங்களில் ஒழுங்கற்ற கட்டட நிர்மாணங்கள் அமைக்கப்பட்டுவந்த காரணத்தினாலேயே இத்தகைய அனர்த்த எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. விசேடமாக நீரினால் ஏற்படும் சேதம் மற்றும் மண்சரிவுகளால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கான எண்ணக்கருத்துக்கள் பெரும்பாலான நிர்மாண நடவடிக்கைகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை.

பேராதனை நுவரேலியா வீதி, கண்டி குருணாகல வீதி முதலிய வீதிகள் அமைக்கப்படும்போது மண்பிட்டிகள் வெட்டப்பட்டதோடு, அங்கே மண்சரிவுகள் தொடர்பாக கவனஞ்செலுத்தி அதற்கேற்ப விசேட நடவடிக்கைகள் எடுக்கப்படாமையால் பாரிய மண்சரிவுகள் ஏற்படத்தொடங்கின. அத்துடன் ஒழுங்கற்ற காணிப்பாவனையாலேயே மலைப்பிரதேசங்கள் மண்சரிவுகளினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. கம்பஹா உட்பட மேல்மாகாணத்தில் பல தாழ்நிலப்பிரதேசங்கள் நீரினால் மூழ்கின. நீர் வடிந்தோடும் காணிகளில் கட்டடங்கள் அமைக்கப்பட்டதும் நீரை உரியமுறையில் அடைத்து வைக்கக்கூடிய அமைப்புமுறைகள் ஏற்படுத்தப்படாமையுமே இதற்குக் காரணம் என அறியக்கூடியதாகவிருந்தது. அத்துடன் ஒழுங்கற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் இயற்கையாக ஏற்படும் இடர்களை நீண்ட அனர்த்தங்களாகவும் மாற்றிவிடுகின்றன.

மனிதனின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது வீதிகளை வெட்டுதல் போன்ற ஆபத்தினை ஏற்படுத்தும் செயற்பாடுகளாக அவை அமையக்கூடாது. தற்போது அபிவிருத்தி நடவடிக்கையானது உலகளாவிய ரீதியில் பிரச்சனையாகக் காணப்படுவது உலக காலநிலை மாற்றங்களாலேயாகும்.
இக்காலப்பகுதியில் இலங்கைக்கு அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றதோடு பெறப்பட்ட மழைநீரும் முன்னைய காலங்களிலும் பார்க்க மிக அதிகமாகக் காணப்படுவதாகவும் வளிமண்டலவியல் ஆராய்ச்சியாளர்கள் தமது ஆரம்ப ஆராய்ச்சிகள் மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர். எல்நினோ நிலைமை காரணமாக கடும் வறட்சி அதனைத் தொடர்ந்து கடும் மழை உண்டாதல் மற்றும் அசாதாரண தீவிரத்துடன் காற்று வீசுதல் போன்ற நிலைமை உலக-ளாவிய ரீதியில் காணப்படுகிறது. உலகில் தொழிற்சாலை மாசுகளால் ஏற்படும் பாதிப்புக்களை இலங்கையில் வசிக்கும் நாமும் விரும்பியோ விரும்பாமலோ சிறிதும் குறைவில்லாத அளவில் ஏற்கவேண்டியவர்களாகவுள்ளோம். ஒழுங்கற்ற காணிப்பாவனை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படுதல் பற்றியும் மலைப்பிரதேசங்களில் உரியமுறையில் காணி-களை பராமரிப்புச்செய்யாமை போன்ற காரணங்களால் மண்சரிவு ஏற்படுதல் பற்றியும் இரண்டாவதாக கவனஞ் செலுத்தவேண்டியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி எனக்குறிப்பிட்டாலும் கட்டடங்கள், பெருந்தெருக்கள் முதலியன உரியமுறையில் அமைக்கப்படவேண்டும் என யாரும் நினைப்பதில்லை. சமூக அபிவிருத்தியும் அனர்த்தங்களினால் பெரிதும் பாதிப்படைகின்றது. சமூக அபிவிருத்தியும் பௌதிக அபிவிருத்தியும் ஒழுங்கான முறையில் நடைபெறாத காரணத்தினால் ஆபத்துக்கள் பல ஏற்படுகின்றன. இது தொடர்பாக செய்யவேண்டிய விடயங்கள் பல உள்ளன. இவை யாவும் ஆபத்துக்கள் மற்றும் சிக்கல்களில்லாத சுலபமான தீர்வுகளாகும். அதாவது அபிவிருத்தி தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது அனர்த்தங்கள் பற்றியும் கவனத்தில் கொண்டு அனர்த்தங்களைக் குறைப்பதற்குச் சில சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இவ்விடத்தில் மிக அதிகமாகக் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் ஒன்றுள்ளது. அதாவது ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகும். ஒரு நாடு என்ற ரீதியில் இந்நடவடிக்கைகளைக் காணக்கூடியதாகவிருப்பது அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய திட்டங்கள்சேர்த்துக்கொள்ளப்படும்போதேயாகும். எனவே, ஒவ்வொரு பிராந்தியத்திலும் பௌதிக மற்றும் சமூக அபிவிருத்திக்கு ஏற்புடைய ஆற்றலுள்ள அனர்த்தமுகாமைத்துவத் திட்டம் நாட்டின் சகல பிராந்தியத்திற்கும் ஏற்புடையதாக இனங்கண்டு வழங்கப்படவேண்டும்.

# மண்சரிவுகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்ண

மண்சரிவுகளைத் தவிர்ப்பது அல்லது குறைப்பதன் பொருட்டு எடுக்கப்படவேண்டிய பொருத்தமான பல நடைமுறைகள் காணப்படுகின்றன. மண்ணானது எத்தகைய பிரயோசனமுமின்றி புவியில் கைவிடப்படக்கூடிய ஒரு வளமல்ல. படிக்கட்டுகள் வெட்டி விவசாயம் செய்வதும் மண்சரிவுகளைத் தவிர்ப்பதற்காக பலகாலம்தொட்டுநடை முறைப்படுத்தப்பட்டுவரும் ஒரு நடைமுறையாகும். இதனால் நீர் தேங்கி நில்லாது விரைவாக வடிந்து செல்கிறது. அத்துடன் இத்தகைய சரிவான பகுதிகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன.

நிலத்தின்மேல் நீர் நன்கு வடிந்து செல்லும்பொருட்டு ?கான்? அமைப்புமுறை ஏற்படுத்தமுடியும்

- புவியின் மண்தட்டுக்களைப் பாதுகாக்கும் பொருட்டு மண்சரிவதைத் தடுக்கக்கூடிய மரஞ்செடிகளை வளர்த்து காடு போன்ற பிரதேசமாக ஆக்குதல்.
- மண்ணரிப்பைத் தடுக்கும்பொருட்டு கினிசெரியா போன்ற தாவரங்களைப் பயிரிடுதல்.
- வழுகிச்செல்லும் நிலத்தை குறுக்கே நீளமான கானுகள் வெட்டி மேற்பாகத்தின் பாரத்தைக் குறைக்கமுடியும். இதனால் மண் சரிந்து செல்வதற்கு வாய்ப்பில்லை.


மேலே குறிப்பிட்ட நடைமுறைகள் யாவும் பொதுவாக எவரும் பின்பற்றக்கூடிய நடைமுறைகளாகும். அத்துடன் அதிகசெலவு கொண்ட நவீன நடைமுறைகளும் தற்போது விருத்திசெய்யப்பட்டுள்ளன.

- சரிந்து செல்லும் மண்தட்டுக்களை கம்பி மற்றும் வலைகள் கொண்டு நிலத்துடன் கட்டிவைத்தல்.
- கொங்கிறீற் அல்லது கல் பாவித்து பலமான அணைகள் கட்டுதல்
- அடிநிலத்திலிருந்து கொங்கிறீற் தூண்கள், மரங்கள், கம்பித்தூண்கள் முதலியன அமைத்து இத்தகைய ஆபத்துக்களைத் தவிர்த்தல்.

இதனைவிட, விவசாயக்காணிகளை வேறு தேவைகளுக்காகப் பிரயோகிப்பதைத் தவிர்த்தல், உத்தரவின்றி மண் அள்ளுதலைத் தவிர்த்தல், கட்டடங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் அமைக்கும்போது தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பின்பற்றுதல் போன்ற நடவடிக்கைகளினால் இத்தகைய பிரச்சனைகளைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.



# கீழிருந்து மேல்நோக்கிச் செல்லவேண்டிய அனர்த்தமுகாமைத்துவத் திட்டங்கள்



கடந்த சில வாரங்களாக நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு வகையான அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மலைநாட்டில் வீடுகள், பெருந்தெருக்கள் பலவும் மண்சரிவுகளில் அகப்பட்டுள்ளதோடு தாழ்நிலங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன. இதற்கிடையே அனுராதபுரம் மாவட்டத்தில் சில பிரதேசங்களில் வறட்சி நிலவியதாக முன்னர் வந்த அறிக்கைகள் தெரிவித்தன. இதன்படி வெவ்வேறு பிரதேசங்களுக்கு வெவ்வேறு வகையான அனர்த்தங்கள் ஏற்படுகின்றன என்பது கண்கூடு. எனவே, ஒவ்வொரு அனர்த்த நிலைமைகளுக்கும் ஏற்பவே அனர்த்தமுகாமைத்துவத் திட்டங்கள் தீட்டப்படவேண்டும்.

அனர்த்தமுகாமைத்துவ நடவடிக்கைகளின்போது அவற்றைக் குறைப்பது முக்கியமாகவிருப்பதோடு அத்தகைய அனர்த்தக்குறைத்தல் நடவடிக்கைக்கு அப்பிரதேசத்தின் பௌதிக தோற்றம், சுற்றாடல், வாழ்கின்ற மக்களின் சமூக பொருளாதார நிலை என்பன கவனத்தில் கொள்வதும் பிரதானமானதாகும். இத்தகைய தரவுகளிலிருந்தே அனர்த்தங்களைக் குறைப்பதற்கான சாதகமான நடவடிக்கைகள் பற்றி தீர்மானிக்கமுடியும்.

இந்த அனர்த்தமுகாமைத்துவத் திட்டங்களில் முக்கிய கருப்பொருளாகவிருப்பவர்கள் அந்தப் பிரதேசத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களாவர். அதற்கப்பால் அப்பிரதேச கிராம சேவகரிலிருந்து பிரதேசசெயலாளர் மற்றும் தீர்மானம் எடுக்கவல்ல மேலதிகாரிகள் வரை சகல உத்தியோகத்தர்களுமாவர். மேலதிகாரிகள் தீர்மானம் எடுப்பதால் அடிமட்ட அமைப்புக்கள் பாதிப்படைவது அவதானிக்கப்பட்டுள்ளது. அத்தகைய தீர்மானங்கள் எடுப்பது தற்போதைய அரச கட்டமைப்பினால் உரியமுறையில் நடைமுறைப்படுத்தமுடியும் என அறியமுடிகிறது. இதற்கேற்ப சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அவற்றிற்கேற்ப தகுந்த அனர்த்தமுகாமைத்துவத்திட்டங்கள் மேற்காள்ளப்படுவதற்கான ஆற்றல் காணப்படுகிறது.

# நகரங்களில் பிரயாணங்களுக்கு ஏற்படும் குறுக்கீடுகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை கிடைக்கப்பெற்ற பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சியானது எப்போதுமில்லாதவாறு பாரிய மண்சரிவுகளை ஏற்படுத்தியிருப்பது கண்கூடு.வழக்கமாக மண்சரிவுகள் ஏற்படுவது மலைப்பிரதேசங்களிலேயே என்பதால் கம்பஹ போன்ற மாவட்டங்களிலும் மண்சரிவுகள் ஏற்படுகின்றன என்ற செய்தி எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது. கம்பஹ மற்றும் கொழும்பு மாணவட்டங்கள் இத்தகைய மண்சரிவு எச்சரிக்கைகள் கொண்ட மாவட்டங்களாக அறிமுகப்படுத்தப்படலாம் என்ற அபிப்பிராயம் ஏற்பட்டாலும் அது வியக்கத்தக்கதல்ல. ஆயினும் இவ்வாறான மண்சரிவுகள் மண்சரிவுகள் அல்ல. அவை ஒழுங்கற்ற காணிப்பாவனை காரணமாக வெறுமனே ஏற்படுகின்றன. இந்த நிலைமை தற்போது அனர்த்தங்கள் வரை சென்றுள்ளன. அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது அநேகமான மண்சரிவுகள் கட்டட நிர்மாணங்களின்போது ஏற்படும் மண் அகழ்வுகளாலேயே ஏற்படுகின்றன என்பது இந்த நிபுணர்களின் அறிக்கைகளிலிருந்து அறியக்கிடைக்கிறது. மலைப்பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்படும் ஒழுங்கற்ற கட்டட நிர்மாணப் பணிகளினால் தற்போது பாரிய பிரச்சனைகள் அந்தப் பிராந்தியங்களுக்கு ஏற்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் மண்சரிவு அச்சுறுத்தல்கள் மிகப் பாரதூரமாகக் காணப்படுகின்றன. கணக்கறிக்கைகளின்படி இம்மாவட்டங்களில் ஒரு சதுரகிலோமீற்றர் பரப்பளவுடைய பிரதேசத்தில் ஒன்று அல்லது இரண்டு மண்சரிவுகள் பொதுவாக ஏற்படுகின்றன. இந்த நிலைமை ஒரு சாதாரண விடயமல்ல. இத்தகைய செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டிருப்போமாயின் பேராதனை மட்டுமல்ல இன்னும் பல நகரங்களும் மூடப்படவேண்டிய நிலை ஏற்படலாம். இவ்வாறே பண்டாரவளை, தெனியாய, இரத்தினபுரி, கம்பளை போன்ற நகரங்களிலும் போக்குவரத்துத் தடைகள் ஏற்படலாம் என இவ்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தேசிய கட்டட நிர்மாண ஆராய்ச்சி நிலையத்தின் அறிக்கையின்படி 2006 ம் ஆண்டில் மட்டும் கண்டி மாவட்டத்தில் மண்சரிவுகள் ஏழும் மண் இடிந்து வீழ்தல் 54ம் ஏற்பட்டன என அறிக்கைகள் காணப்படுகின்றன. பதுளை மாவட்டத்தில் மண்சரிவுகள் 09ம் மண் இடிந்து வீழ்தல் 22ம் ஏற்பட்டன என அறிக்கைகள் காணப்படுகின்றன மண்சரிவு- எச்சரிக்கைகள் கொண்ட 09 மாவட்டங்களில் இவ்வருடத்தில் மட்டும் 36 மண்சரிவுகளும்
116 மண் இடிந்து வீழ்தல்களும் ஏற்பட்டுள்ளன என இப்புள்ளிவபரங்கள் காட்டுகின்றன. இவை வெறுமனே மண்சரிவுகள்மட்டுமல்ல. இத்துடன் உயிர் மற்றும் சொத்துக்களும் பாரிய அளவில் அழிவடைந்துள்ளன.

கணடி மாவட்டம் அதிவிரைவாக அபிவிருத்தியடைந்து வருவதோடு மக்கள் குடியிருப்புக்களும் வர்த்தக நிலையங்களும் அதிக அளவில் நிறுவப்பட்டுவருகின்றன. நகரை அண்டிய மலை உச்சிகளில் ஒழுங்கற்ற பல கட்டட நிர்மாணங்களைக் காணக்கூடியதாவிருப்பதோடு இவற்றின் பெறுபேறுகளாக நாம் மேலே குறிப்பிட்ட அனர்த்தங்களே காணப்படும்.

தகுந்த திட்டங்கள் இல்லாமல் ஒழுங்கற்றமுறையில் மேற்கொள்ளப்படும் கட்டட நிர்மாணங்களுக்கான காணிப்பாவனையின்போது போதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை, உரியமுறையில் கற்பாறைகளை அகழ்தல் மற்றும் உடைத்தல், மலைப்பிரதேசங்களில் ஒழுங்கற்ற முறையில் கட்டடங்கள் மற்றும் வீதிகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளின்போது பல தவறுகள் ஏற்பட்டுள்ளன எனக் காணக்கூடியதாவிருக்கின்றது. கண்டி நகரையண்டிய மலைப்பிரதேசங்கள் பாதுகாப்பற்ற நிலையிலுள்ளதாக நீண்டகாலமாக நிபுணர்கள் எச்சரித்து வந்துள்ளனர். இவ்வாறே பேராதனை நகர் பற்றியும் இத்தகைய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டது இன்று நேற்றல்ல. 1998 ம் ஆண்டிலிருந்தே இத்தகைய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. இவ் எச்சரிக்கைகளைக் கருத்தில்கொள்ளாது மென்மேலும் அபிவிருத்தித் திட்டங்கள் இவ்வாறு மேற்கொள்வதால் பாரிய அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

தற்போது உலகில் காலநிலை மற்றும் சீதோஸ்ண நிலை என்பன மாறிக்கொண்டே செல்கிறது. மழைவீழ்ச்சி மற்றும் வீசும் காற்று என்பன தீவிரமடைவது முன்னரைவிட தற்போது மிக அதிக அளவில் காணப்படுகிறது. இதனால் இடர்கள் பல ஏற்படுகின்றன. இத்தகைய இடர்கள் பாரிய அனர்த்தங்களாக நீண்டு செல்வதற்கு நாங்களே காரணமாகும். இந்த ஆண்டு மலைப்பிரதேசங்களில் மண்சரிவுகளும் மண் இடிந்துவீழ்தலும் பாரிய அளவில் காணப்படுகின்றன. இவ்விடயங்கள் யாவற்றையும் இணைத்தே எமது எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது.

## மண்சரிவினால் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைப்பதற்கான நீண்டகால நடவடிக்கைகள்

- முண்சரிவு அனர்த்தப் பிராந்தியங்கள் பற்றி படம் போடுதல் மூலம் பாதுகாப்புப் பிரதேசங்களைப் பிரித்து வெவ்வேறாக படம் போடுதல்.

இந்தப் படத்தின் மூலம் அனர்த்த எச்சரிக்கை தொடர்பான பிரதேசங்களை இனங்காணமுடியும். ஏதாவது கட்டடங்கள் அல்லது அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமாயின் அனர்த்தங்களைக் குறைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்தத் திட்டம் வழிவகுக்கிறது.

- மண்சரிவு எச்சரிக்கைகள் கொண்ட பிரதேசங்களில் பணிபுரியும் அரச மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்களுக்குக் காணிப்பாவனை தொடர்பான அறிவுறுத்தல் கையேடு ஒன்றினை தயாரித்துக் கொடுத்தல்.

- மத்திய மற்றும் மாகாண சபைகளில் இவ்வாறான பிரதேச நிறுவன உத்தியோகத்தர்களுக்கு . மண்சரிவு ஆபத்துக்களைக் குறைப்பது தொடர்பான தொழில்நுட்ப அறிவினை வழங்குதல்

- சுற்றாடல் அழிவினை ஏற்படுத்தாத கட்டட நிர்மாணங்களை அமைத்தல்.

- மனாான? லனமள ஹைழலன சடயஐமு டமுராடய மள?ரனமுா டள?ர"

- மண்சரிவு தொடர்பான தகவல்களைக் கொண்ட தரவு வங்கியை அமைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்டகால நடவடிக்கைகள்

- மக்களுக்கு அறிவு ஊட்டுவதற்கான ஆலோசனை சபை ஒன்றை அமைத்தல்.
- மக்கள் மீள்குடியேற்றங்களின்போது காணிப்பாவனை பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- புதிய வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படும்போது மண்சரிவினால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கான தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல்.
- பலங்குறைந்து காணப்படும் மலைச்சாரல்களை பலங்கொண்ட மலைச்சரிவுகளாக மாற்றுவதற்கான தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல்.
- எச்சரிக்கைகள் கொண்ட பிராந்தியங்களில் ஆராய்ச்சிகள் மெற்கொள்ளுதலும் அந்த அனுபவங்கள் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதலும்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடனான ஒத்துழைப்பிற்கான தொடர்புகளை விருத்தி செய்தலும் அந்த அனுபவங்கள் மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதலும்

# தாழ்ந்த இடங்களில் நீர் இறங்கிச் செல்லுமாயின்...

வளிமண்டமல ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவிப்பதுபோல் இந்த ஆண்டு ஐப்பசி மாதத்தில் கிடைக்கப்பெற்ற பருவப்பெயர்ச்சி மழையானது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு தடவையில் கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியானது வழக்கமாகக் கிடைக்கப்பெறும் மழைவீழ்ச்சியைப் போன்று இரு மடங்காகக் காணப்பட்டது. இந்த பாரிய மழைவீழ்ச்சி காரணமாக தீவின் தாழ்நிலங்கள் யாவும் வெள்ளத்தினால் மூழ்கின. அதிக மழை காரணமாக மலைப்பிரதேசங்களிலுள்ள மண் பிட்டிகள் பல சரிந்து வீழ்ந்ததால் தாழ்நிலங்கள் பல ஏக்கர் கணக்கில் அள்ளுண்டு சென்றன. கம்பளை, கொழும்பு மற்றும் களுத்தறை மாவட்டங்களில் இந்த அச்சுறுத்தல்கள் அதிகரித்துக் காணப்பட்டன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது வெள்ளப்பெருக்கிற்கு காரணமாயிருந்தது அதிக மழைவீழ்ச்சி மட்டும் அல்ல எனவும் இந்த மாவட்டங்களில் அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கருத்திட்டங்களும் மற்றும் உரியமுறையில் நீர் வடிந்து செல்லக்கூடிய ஒரு திட்டம் காணப்படாமையும் காரணமாக அமைகின்றன. இத்தகைய அசாதாரண வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்குக் காரணமாகவிருந்த இரு பிரதான விடயங்கள் தற்போது இனங்காணப்பட்டுள்ளன. அதில் ஒன்று, நீர் வடிந்தோடும் மார்க்கங்கள் பல அனுமதியற்ற பல்வேறு கட்டட அமைப்புக்களினால் தடைப்படுதல். அதாவது, வெள்ளம் வடிந்தோடுவதற்கு தடையை ஏற்படுத்தக்கூடிய பொலித்தீன் மற்றும் நகரில் காணப்படும் பல கழிவுப்பொருட்கள் காணப்படுகின்றன. இதனால் வெள்ளம் இலகுவில் வடிந்து செல்லமுடியாதுள்ளது. தவறான முறைகளில் காணிகளைப் பாவனைக்குட்படுத்துவது இன்னொரு காரணமாகும். விசேடமாக மேல்மாகாணத்தில் காணப்படும் காணிகளில் இத்தகைய கட்டடங்களை அமைத்து அதி உச்ச வர்த்தகப் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முயற்சிக்கின்றனர். இதனால் நீர் வடிந்து செல்லும் வயல்கள் போன்ற காணிகள் அதிவேகமாகப் பாரிய பாதிப்புக்குள்ளாகின்றன. கொழும்பில் மேற்கொண்ட

ஆய்வின்படி புதிய வீதியமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது நீர் வடிந்தோடுவது பற்றி நன்கு சிந்தித்துத் திட்டம் தீட்டப்படாமையாலேயே வெள்ளநிலைமை மோசமடைந்தது எனக்காணக்கூடியதாக இருக்கின்றது. கொழும்பு கட்டுநாயக்கா வீதி அமைக்கப்படும்போது தாழ்நிலங்களுக்கான பாதிப்புக்கள் பற்றி கவனஞ் செலுத்தப்படாமையாலேயே கொழும்பு-கட்டுநாயக்கா பிரதான வீதியும் நீரினால் மூழ்கின.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடயம் நீண்டகாலமாக உரையாடப்பட்டு வந்ததோடு தற்போது இதனைக் குறைப்பதற்கான சில ஆலோசனைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

## அவையாவன.

- நகர அபிவிருத்தி முறைமையைப் பராமரிக்கும் பொறுப்பினை அந்தப் பிரதேச மாகாண சபை நிர்வாக அலகுகளுக்கு அளிப்பதும் அந்த நிறுவனங்களுக்க அத தொடர்பான அவசிய தகவல்களைப் பெற்றுக்கொடுத்தலும்

- நீர் வடிந்தோடும் நிலம் மேலும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களைப் பலப்படுத்துதல்

- மேல் மாகாணத்திலுள்ள பயிாச்செய்கைக்கு உட்படுத்தப்படாத தாழ்நிலங்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு விவசாயிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குவதன் மூலம் அத்தகைய வயல் நிலங்கள் பாதிக்கப்படாமலிருக்கும் என அம்மக்களுக்குத் தெரியப்படுத்துவதோடு அதனால் மேல்மாகாணம் வெள்ளப்பெருக்கிற்கு உட்பட வாய்ப்பில்லை எனவும் அறிவுரை வழங்குதல்.

- நீர் வடிந்தோடும் மார்க்கங்களைத் தடைசெய்யக்கூடிய கட்டட நிர்மாணங்களை கண்காணித்தல்



## உள்ளூராட்சி நிறுவனங்களின் பொறுப்புக்கள்


கிராம மற்றும் நகரங்களை நிர்வகிக்கும் அலகு என்பதே உள்ளூராட்சி நிறுவனமாகும். அதுவே கிராமத்தின் பிரதேச சபையாகும். நகரமாயின் அது நகர சபை அல்லது மாநகர-சபையாகும். இத்தகைய பிரதேச நிறுவனங்களால் மெற்கொள்ளப்பட்டு வரும் கட்டமைப்பு ஒரு சிறந்த மட்டத்திலான அலகாகும். வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு சந்தர்ப்பங்களை நிர்வகிப்பது, ஒழுங்கற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள், சுற்றாடல் மாசடைதல் மற்றும் மக்களின் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுக்கான சட்டதிட்டங்கள் இக்கட்டமைப்பில் குறைவில்லாமல் காணப்படுகின்றன. இங்கே பிரச்சனையாகக் காணப்படுவது இந்நடைமுறைகள் ஒழுங்காகப் பின்பற்றப்படாமையேயாகும்.



உதாரணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆக்கப்பட்டுள்ள நகர அபிவிருத்தி பற்றிய சட்டதிட்டங்களை கருத்தில் எடுத்துக் கொண்டால் இவற்றினூடாக வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு சந்தர்ப்பங்களுக்கேற்ப நீர் வடிந்தோடும் முறைமையைப் பாதுகாத்தல், அந்நிலங்களைப் பாதுகாத்தல் போன்ற நடவடிக்கைகள் பற்றி அறியலாம். இந்த செயற்றிட்டங்கள் பிரதேசசபை அல்லது நகரசபை மூலம் நடைமுறைப்படுத்தப்படுமாயின் அனர்த்தங்களைக் குறைக்கும் நிலைக்குக் கொண்டுவருவதற்கு அந்த அந்த மாகாணங்களுக்கு ஏற்றதாக பல சந்தர்ப்பங்கள் உள்ளன. உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது பிரதேச மக்களை அண்மித்துப் பணியாற்ற வேண்டும். இந்நிறுவனங்களின் மேற்பார்வையில் மக்களுக்கு தேவையான அறிவுரைகளை வழங்குதல், அது தொடர்பான வழிகாட்டல்களை வழங்குதல் முதலியவற்றிற்கான அமைப்புக்களை ஏற்படுத்துவதற்கான தராதரம் எம்மிடம் உள்ளது.

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு மற்றும் புயற்காற்றினால் ஏற்படும் அழிவுகளைக் குறைக்கக்கூடிய வீடமைப்புக்களை நிர்மாணிப்பதற்கு உரிய வழிகாட்டல்களையும் அறிவுரைகளையும் தேசிய ஆராய்ச்சி நிறுவனத்திடமிருந்தும் (தொலைபேசி- 011588946 தொலைநகல் - 0112502611) பெலவத்த பத்தரமுல்லவில் அமைந்துள்ள வீடமைப்புத் திட்டமும் நிர்மாணமும் நிலையத்திலிருந்தும் (தொலைபேசி- 2787661 தொலைநகல் - 2787414) பெற்றுக்கொள்ளமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலதும் ஏற்படுவது மனிதனுக்கே?.

அனர்த்தங்கள் பற்றி இக்கதையில் முக்கியம் பெறுவது அண்மையில் கடந்த சில நாட்களாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்குப் பற்றியதேயாகும். உண்மையில் இடர் ஒன்று அனர்த்தமாக மாற்றம் பெறுவது என்பது ஒரு தனிநபரோ அல்லது அந்தச் சமூகமோ பாதிப்பிற்குள்ளாவதென்பதாகும். இலங்கையில் கம்பஹா மாவட்டத்திற்கு மட்டுமல்ல உலகளாவிய ரீதியில் எங்கும் அனர்த்தங்கள் அதிகரித்துக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாவிருக்கின்றது. அனர்த்தங்களினால் உயிர்ச்சேதம், சொத்துக்கள் அழிவு மற்றும் நாட்டினதும் சமூகத்தினதும் உடைமைகளுக்கு ஏற்படும் சேதங்கள் என்பன தற்போது மிக அதிகமாகக் காணக்கூடியதாகவிருக்கின்றன. அனர்த்தமுகாமைத்துவ நிபுணர்களால் எமக்கு காண்பிக்கப்படுவது யாதெனில், உலக சனத்தொகைப் பெருக்கத்தை பொருளாதார வளர்ச்சியுடன் தொடர்புபடுத்தி ஆராயவேண்டிய மட்டத்தில் அனர்த்தங்கள் சம்பந்தமான அபிவிருத்தி காணப்படவேண்டுமென்பதேயாகும்.

இத்தகைய பேராபத்துக்களை ஏற்படுத்தும் அனர்த்தங்களைக் குறைப்பதற்கான உபாயமார்க்கங்களை இற்றைவரை உலகின் பலநாடுகளிலுமுள்ள பொறுப்புவாய்ந்த நிறுவனங்கள் நடைமுறைப்படுத்திவருகின்றன. மேற்படி உபாயமார்க்கங்களில் நீடித்து நிலைக்கும் தீர்வுகள் காணப்படாமையால் மக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சகல அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளும் வெற்றியளிக்கவில்லை.

இதனாலேயே அனர்த்தமுகாமைத்துவ நடவடிக்கைகளில் சமூகங்களின் பிரசன்னமானது மிக மிக முக்கியமானதும் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமெனவும் கருதப்படுகிறது. இந்த நிலைமையை தற்போது அனர்த்த முகாமைத்துவ நிபுணர்கள் நன்கு விளங்கிக்கொண்டு அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் இதனை முக்கிய அம்சமாகக்கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் எனக் காணக்கூடியதாவிருக்கிறது. அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் தாக்கம் எத்தகையது என ஆராய்ந்து பார்ப்பது மிகமுக்கியமாகும். அனர்த்தமொன்று ஒரு மக்கள் கூட்டத்திற்கு அல்லது ஒரு குறிக்கப்பட்ட பிரதேச சமூகத்திற்கு பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும். அந்த அனர்த்தத்தினால் முழு நாடுமே பாதிக்கப்படுமானால் அந்த நாடு முழுவதும் ஒரு சமூகமாகவே கருதமுடியும். ஒரு குறிப்பிட்ட பிரதேசமக்கள் மட்டும் இந்த அனர்த்தப் பாதிப்பிற்குள்ளாவார்களாயின் அவ்விடத்தே சமூகம் எனக்கருதுவது இந்த குறிப்பிட்ட பிரதேச மக்களையேயாகும்.

இதனால் அனர்த்தங்களின் பாதிப்பிற்குள்ளாகும் சமூகங்கள் எவ்வாறு அனர்த்தங்களுடன் வாழ்க்கையை ஓட்டுகின்றன என்பது பற்றியும், அனர்த்தங்களினால் ஏற்படும் தாக்கங்களைக் குறைத்தல் சம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பல்வேறு கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. சிறந்த வினைத்திறனுடன் திட்டமிடப்பட்ட இத்தகைய கருத்திட்டங்கள் பல இடங்களில் வெற்றியளித்துள்ளன. ஆயினும், இத்தகைய கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது வெற்றியளித்திருப்பினும் நீண்டகால நடைமுறையில் பாரிய வெற்றியளிக்கவில்லை என்பதே உலகளாவிய ரீதியில் பெறக்கூடிய அனுபவங்கள் வாயிலாகக் காணக்கூடியதாகவிருக்கின்றது. விவரணத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது சாதகமாகக் காணப்பட்டாலும் அது நீண்டகால நடைமுறையில் வெற்றியளிக்காததற்கான காரணத்தை ஆராய்ந்த அனர்த்தமுகாமைத்துவ நிபுணர்கள், உரிய சமூகங்களின் பிரசன்னம் காணப்படாமையும் மற்றும் அந்தச் சமூகங்கள் தீர்மானம் எடுத்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சி, அறிவு போதாமை போன்ற காரணங்களாலேயே இந்தக் கருத்திட்டங்கள் வெற்றியளிக்காமைக்குக் காரணம் எனக் கூறியுள்ளனர்.

எவ்வாறாயினும் அனர்த்தங்களிடையே வாழும் பிரதேச மக்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வது மிகமுக்கியமாகும். இந்த அனுபவங்களை அறிந்துகொள்வதற்கு பல்வேறு உதவி அமைப்புக்களின் அனுசரணைகள் கிடைத்துள்ளன. அதேபோல் அனர்த்தங்களைக் குறைத்தலுக்கான திட்டங்களை ஆராய்தல், அனர்த்தமுகாமைத்துவத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலில் சமூகங்களை உட்படுத்துதல், இதனை நடைமுறைப்படுத்தியதும் விபரங்களை வெளியிடுதல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பாக சமூகங்களின் பிரசன்னத்துடன் மேற்கொள்ளப்பட்ட அனர்த்தங்களைக் குறைத்தல் செயற்பாடுகளில் சாதகமான பெறுபேறுகள் கிடைத்துள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட விவரணக் கருத்திட்டங்கள் காட்டுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறட்சியின் பாதிப்பினைக குறைப்பது எப்படி?

வறட்சியின் பாதிப்பினைக் குறைப்பதற்கு முதலில் செய்யவேண்டியது யாதெனில், தகுந்த நீர் முகாமைத்துவ நடைமுறைகளுடன் சிறந்த முறையில் நீரைப் பாவித்தலாகும். இதற்குப் பல நடைமுறைகள் உள்ளன.

1. நிலத்தின் மேல் ஓடிச்செல்லும் மழைநீரையும் குளம், வாவி, ஆறு போன்ற நீர்நிலைகளிலுள்ள நீரையும் சிறந்தமுறையில் பாவித்தல்
2. உயர் தர நன்னீரை அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பாவித்தல். (உதாரணம்) உயர் தர நன்னீரைக் குடிப்பது மற்றும் உணவு தயாரித்தல் முதலிய அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்துவதோடு பூங்கன்றுகளுக்குப் பாய்ச்சுதல், வாகனங்கள் கழுவுதல் மற்றும் மலகூடத்தேவைகள் முதலியவற்றிற்கு நன்னீரைப் பாவிக்கக்கூடாது. அதிக மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் பெறுமதி மிக்க இத்தகைய நன்னீரைப் பாவிப்பதற்கு வழிவகுத்தல் வேண்டும்.
3. பயிர்ச்செய்கைத் தேவைகளின்பொருட்டு நீரை மிக அவதானமாகப் பாவிப்பதோடு குறைந்த அளவு நீர்த்தேவை கொண்ட விவசாய செயன்முறைகளைப் பின்பற்றுதல்.
4. அதிக நீர் தேங்கிநிற்கக்கூடியவாறு வன முகாமைத்துவத்தை ஏற்படுத்துதல்.
5. மழைநீரை ஆகக்கூடிய அளவில் வீட்டுத்தேவைகளுக்கும் விவசாய நடவடிக்கைகளுக்கும் பாவித்தல்.

## உஸ்கல மக்களின் பசியைப் போக்கிய மழைநீர்க் கருத்திட்டம்

உஸ்கல என்பது கிருவாபத்துவவில் சூரியவெவிற்கு அண்மித்த ஒரு கிராமமாகும் ஹம்பாந்தோட்டைக்கு உரித்தான அதே வெப்பச்சூழல் இந்தக் கிராமத்திலும் குறைவில்லாமல் காணப்படுகிறது. அங்கு பெறும் மழைவீழ்ச்சி சேனைப் பயிர்ச்செய்கைக்கு மட்டும் போதுமானதே தவிர காலபோகச் செய்கைக்குப் போதுமானதாக இல்லை. மழைநீரைச் சேகரித்துக் கொள்வதற்கு சிறு குளமே இருந்தது. அதுவும் சேற்றினால் மூடப்பட்டு பாழடைந்திருந்தது. உரிய காலத்தில் மழை கிடைக்கப்பெறாத கிராமமாகிய உஸ்கல பிதேச விவசாயக்குடும்பங்கள் பாரிய அளவில் முகங்கொடுத்துவந்த சவால்களுக்கு ஒரு முடிவு கிடைக்கக்கூடியதாவிருந்தது மழையொன்று அங்கே கிடைக்கப்பெற்றதன்பின்னரே.



கடந்த பல வருடங்களுக்கு முன் கிருவானபத்து சமூக அபிவிருத்திச் சங்கம் புதிதாக ஒரு கருத்திட்டத்தை உஸ்கல கிராமத்திற்கு அறிமுகப்படுத்தியது. குடியிருப்புக்களின் நாளாந்தத் தேவைகளுக்கு நீரைப் பெற்றுக்கொடுப்பதுடன் இனங்காணப்பட்ட இன்னொரு முறைமூலம் பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியது. இந்தக் கருத்திட்டத்தைக் கிராமத்திற்குக் கொண்டுவந்த கிருவானபத்து அபிவிருத்திச் சங்கம் ஒரு புதிய மாற்றுவழியினை உஸ்கல கிராமவாசிகளுக்கு அறிமுகப்படுத்தியதோடு

விருப்புடன் தம்மையும் ஈடுபடுத்திக்கொண்டது. மழைகாலங்களில் வீட்டுக்கூரைகளில் விழுகின்ற நீர் சீமெந்து கொண்டு அமைக்கப்பட்ட தொட்டியினுள் சேகரிக்கப்படுவதோடு இந்த நீர் ஒரு சாதாரண வீட்டு நாளாந்தத் தேவைக்கு சில மாதங்களுக்குப் போதுமானதாகவிருந்தது. அத்துடன், வெற்றுநிலங்களில் விழும் நீர் வீணாகாது சேகரித்துக்கொள்வதற்காக மண்ணினால் உற்பத்தி செய்யப்பட்ட கலம் அல்லது வேறு பாத்திரங்கள் பாவித்து வீட்டுத்தோட்டம் மற்றும் பயிர்ச்செய்கைக்காகப் பிரயோசனப்படுத்தப்பட்டது. சில இடங்களில் சீமெந்துத் தொட்டிகள் வீட்டுத்தோட்டத்தில் நீர் வழங்கும் பிரதான மூலமாகவும் காணப்பட்டன. கிராமவாசிகள் தத்தமது தேவைகளின்பொருட்டு நீர் சேகரிப்பதற்காக 11 குடியிருப்பு அலகுகளும் விவசாய நீர் வழங்கலுக்காக 40 அலகுகளும் அமைத்துள்ளனர். அத்துடன் கிராமத்தில் பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்கும்பொருட்டு பொது மழைநீர்த்தொட்டிகளும் கிராமவாசிகளின் முயற்சியினால் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது தமது காலபோகப் பயிர்ச்செய்கையை ஒழுங்காக மேற்கொள்வதற்கு அவர்களால் முடிகிறது. இதற்கும் மேலாக இம்மக்கள் மழைகுறைந்த காலங்களிலும் சிறு மழையினால் கிடைக்கப்பெறும் மழைநீரைக்கொண்டு சிறுபோகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கும் ஆற்றலைக் கொண்டிருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனிதனின் உயிர், உடமைகளுக்கு மட்டுமல்ல அவனது வாழ்வாதாரங்களுக்கும் இந்த அனர்த்தங்கள் சேதங்களை விளைவித்துள்ளன.

கடந்த நாட்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக தனது பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்ட ஒரு விவசாயத் தொழிலாளி இதனிலும் பார்க்க பாரிய வெள்ளப்பெருக்குக்கு முகங்கொடுத்திருக்கலாம் என தனது கவலையை வெளியிட்டார். இந்த விவசாயியின் நெஞ்சத்தில் இத்தகைய கவலை பிறக்கக் காரணமாகவிருந்தது அவரது வயிற்றைக்கழுவும் வாழ்வாதாரங்கள் அனர்த்தத்தின்போது சேதமடைந்ததே யாகும்.இதனால் சொல்லப்படுவது யாதெனில், மனிதனின் உயிர், உடமை மட்டுமல்ல அவனது வாழ்வாதாரங்களுக்கும் இந்த அனர்த்தங்கள் சேதங்களை விளைவித்துள்ளன என்பதாகும். அனர்த்தங்களுடன் வாழ்க்கையை ஓட்டுவதற்கு இத்தகைய வாழ்வாதார மூலங்கள் பாதுகாக்கப்படவேண்டுமென இதன்போது அறியக்கூடியதாகவிருந்தது. அண்மைய அனர்த்தங்களின்போது. அதிக வாழ்வாதார சேதங்கள் ஏற்பட்டது மீன்பிடித் தொழிலாளர்களுக்கேயாகும். அதுவும் 2002ல் ஏற்பட்ட சுனாமித் தாக்கத்தின்போதேயாகும். வெள்ளம் காரணமாக கைத்தொழில், விவசாயம் முதலிய துறைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. வறட்சியானது நேரடியாகப் பாதிப்பது நீரைப் பாவித்து நெற்செய்கை போன்ற அதிக நீர்ப்பாவனைகொண்ட விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கேயாகும். கடந்த காலங்களில் பேராதனை நகரத்தில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக அந்நகரத்தில் வர்த்தகத்ததில் ஈடுபட்டு வந்த பலருக்கு பல்வேறு வகையான வாழ்வாதார சேதங்கள் ஏற்பட்டன. அனர்த்தங்களால் இவ்வாறான அழிவுகளுக்கு முகங்கொடுத்த மக்களுக்கு நாம் நினைப்பது போல் மிக எளிதில் தமது முன்னைய நிலைக்கு திரும்பக்கூடிய ஆற்றல் உள்ளதா? அவர்கள் தமது வாழ்க்கையைச் சிறந்த முறையில் மீளக்கட்டியெழுப்புவது மிக இலகுவான விடயமல்ல. சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட பல இலட்சம் மீனவமக்கள் தற்போது மீண்டும் தமது வாழ்க்கையைச் சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கு முடியாமலிருப்பதற்குப் பல்வேறு சிக்கல் நிறைந்த பிரச்சனைகள் காணப்படுகின்றன. பேராதனையில் ஏற்பட்ட மண்சரிவினால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தமது வாழ்வாதார மார்க்கங்களைச் சிறந்த முறையில் கொண்டுவருவதும் ஒரு பாரிய சவாலாக உள்ளது.

இதனால் அனர்த்தமுகாமைத்துவத்தின்போது உயிர், உடமைகள் மட்டுமல்ல மக்களின் வாழ்வாதார மூலங்களும் அவர்களின் பாதுகாப்பு விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் வல்லுனர்கள் தற்போது ஒரு செயல்வடிவக் கட்டமைப்பினை ஆக்கிக்கொண்டிருக்கின்றனர். அதில் இரண்டு முக்கிய விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அனர்த்தங்களின்போது சேதமாக்கப்பட்டு எஞ்சிய உடமைகளையும் வளங்களையும் பாதுகாப்பது மற்றும் சேதமுற்ற வளங்களை மீண்டும் கட்டியெழுப்புவது என்ற இரண்டுமாகும். இதனையும் விட ஒவ்வொரு பிரதேசத்திற்கும் பொருத்தமான கைத்தொழில் மற்றும் வாழ்வாதார மார்க்கங்களை அறிமுகப்படுத்துவது பற்றி ஆராய்ந்து பார்ப்பதும் அனர்த்த முகாமைத்துவத்தில் ஈடுபட்டு வரும் அதிகாரிகளின் நடவடிக்கைகளாக இருக்கவேண்டும். அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் மக்கள் பல்வேறு வகையில் உளரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களாவர். வாழ்வாதார மூலங்களை அபிவிருத்தி செய்யும்போது அவர்களது உளரீதியான பாதிப்புக்களை நீக்குவதும் ஒரு சவாலாக அமைந்துவிடுகிறது.

அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளின்போது வாழ்வாதாரங்கள் பற்றியும் கருத்தில்கொண்டு சேதமுற்ற வாழ்வாதாரங்களை மீண்டும் அப்பிரதேசத்திலேயே ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும் என்பது பிரதான விடயமாகும். அனர்த்தங்களின்போது வீட்டினை இழந்த ஒருவருக்கு வீடுகட்டி வழங்குவதுபோல் வாழ்வாதாரங்களை இழந்த ஒரு நபருக்கு இலகுவில் அவற்றை வழங்கமுடியாது. வீடு பெற்றுக்கொடுப்பதாயின் பொது வீடமைப்புத்திட்டத்தின் மூலம் அமைத்துக்கொடுக்கமுடியும். ஆனால் இழந்த வாழ்வாதாரங்களை ஒருவருக்கு அவ்வாறு சுலபமாக வழங்கமுடியாது. இற்குக் காரணம்

ஒவ்வொரு நபருக்கும் அவருக்கு ஏற்பட்ட வாழ்வாதார இழப்புக்களுக்கு ஏற்ப உதவிகள் வழங்கப்படவேண்டும். கடந்த சுனாமி அனர்த்தத்தின்போது தமது தொழில் வாய்ப்புக்களை இழந்த மீனவ மக்கள் தொடர்பாக சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து இது புலனாகியது. அதாவது, அவர்களது வாழ்வாதார மார்க்கங்களை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. ஒவ்வொரு பிரதேசத்திலும் அம்மக்கள் பிரயோகித்துவந்த மீன்பிடிவள்ளங்கள் தனிப்பட்ட விசேடதன்மை கொண்டிருந்தன. ஒரு மீனவ சமுதாயத்தில் ஒவ்வொரு மீனவரும் தத்தமது வாழ்வாதாரத்திற்காக தனித்தனியான நடைமுறையைக் மேற்கொண்டிருந்தமையைக் காணமுடியும். இந்த நடைமுறை மீனவமக்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வறட்சியின்போது தமது வாழ்வாதாரங்களை இழந்த விவசாயமக்களுக்கும் இது பொருந்தும். அனர்த்தங்களின்போது பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வாதாரங்களை மீளக்கட்டியெழுப்பும்போது பாதிக்கப்பட்ட நபருக்குப் பொருத்தமான வகையில் அவர்களது வாழ்வாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்புவது அவசியம் என்பதை அனர்த்த முகாமைத்துவத் திட்ட நடவடிக்கையாளர்கள் கருத்தில்கொள்ளவேண்டும்.

வாழ்வாதாரங்கள் தொடர்பாக ஆராயும்போது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய இன்னொரு விடயமும் உண்டு. அதாவது குறிப்பிட்ட அனர்த்தங்களுக்கேற்ப அப்பிரதேசத்திற்குப் பொருத்தமான வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இயற்கை அனர்த்தங்களில் தமது வாழ்வாதார மார்க்கங்கள் சேதமைடைவது பற்றி அப்பிரதேச மக்கள் அறிந்திராமையும் சில இடங்களில் காணக்கூடியதாகவிருக்கின்றது. அவ்வவ் பிரதேசத்திற்குப் பொருத்தமான வாழ்வாதார மார்க்கங்களுக்கு அம்மக்களின் கவனத்தைச் செலுத்தச்செய்வது இந்தப் பிரச்சனைக்குத் தீர்வாகிறது. உதாரணமாக மழைவீழ்ச்சி குறைந்த வறட்சியான பிரதேசத்திலுள்ள விவசாயி ஒருவர் நீர் அதிகம் தேவைப்படும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வாராயின் அவரது பயிர்ச்செய்கை பாதிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

இத்தகைய பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நீர்த்தேவை குறைந்த பயிர்ச்செய்கைமுறைகளை அறிமுகப்படுத்தவேண்டும். இது தொடர்பான அறிவு எமது அனுபவங்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாம். எனினும் எதிர்காலப் பரம்பரையினரைக் கருத்தில்கொள்ளாது இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதே இன்று பாரிய பிரச்சனையாகக் காணப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மக்கள் மேற்கொண்டுவந்த வாழ்வாதார நடைமுறைகள் அனர்த்தம் ஏற்பட்ட பிரதேசத்திற்குப் பொருந்தாவிடின், அவர்களை வேறு புதிய வாழ்வாதார மார்க்கங்களுக்கு கவனஞ்செலுத்தச்செய்வது மிகமுக்கியமாகும். எனவே, அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளின்போது, அம்மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு அப்பிரதேச மக்களுக்குப் பொருத்தமான புதிய நடைமுறைகள் பற்றி அம்மக்களுக்கு அறியச்செய்யவேண்டும். இதன்போது பிரதேசத்தில் கிடைக்கப்பெறும் வளங்களைப் பிரயோகித்து புதுப்புதுப் பொருட்களையும் சேவைகளையும் சந்தைக்குப் பொருத்தமாக உற்பத்தி செய்வது மிகவும் அனுகூலமான செயற்பாடாகும். இத்தகைய செயற்பாட்டினை மேற்கொள்வதற்கேற்ற பலமும் ஆற்றலும் பற்றி தீர்மானம் எடுக்கும் உரிமை அனர்த்தப்பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பது மற்றொரு முக்கிய விடயமாகும். மேற்படி ஆலோசனைகளின் அனுகூல, பிரதிகூலங்களை ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு நிபுணர்கள் தேவைப்படுவர்.

இயற்கையான இடர்கள் அனர்த்தங்களாக மாறுவது என்பது அவ்வவ் பிரதேசமக்களுக்கும் உடமைகளுக்கும் சேதங்கள் ஏற்படுவதாகும். அனர்த்தங்களால் ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களே அனர்த்தங்கள் தொடர்பான எச்சரிக்கைகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு அவர்களின் பொருளா-தார பலத்திற்கேற்ப தீர்மானங்களை எடுப்பதற்கு சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. எனவே, பொருளாதார பலத்தினை மேம்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய ஒரே நடவடிக்கையாகக் காணப்படுவது நிவாரணம் வழங்குவது அல்ல, வாழ்வாதார மார்க்கங்களை அபிவிருத்தி செய்வதே யாகும்.

பழையகால நெல்லினங்களுக்குச் சந்தையிலும் ஏனையநெல் வகைகளைவிட அதிக விலை கிடைக்கின்றது. தற்போது இவ்விசாயிகளின் வருவாயும் பெருகிவருகின்றது.

# உவர்த்தன்மையைத் தோற்கடிக்கும் பழைய நெல் வகைகள்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தெஹிகஹலந்தவில் வசிக்கும் றஞ்சித் போன்ற பல நெற்செய்கையாளர்களின் கனவுகள் பலிதமாயின. ஆயினும் அவர்களின் கனவுகள் நனவுகளாவதை மழுங்கடிப்பது போல் சிறந்த அறுவடைக்கு இடையூறாக இருந்தது தெஹிகஹலந்த விளைநிலங்களில் அதிகமாகக் காணப்பட்ட உவர்த்தன்மையேயாகும். இதன்காரணமாக சகல நெற்செய்கைப் போகங்களிலும் அவர்கள் எதிர்பார்த்ததைவிட மிகக்குறைவான அறுவடையே கிடைத்தது. இந்த நிலை அதிகரித்துக் கொண்டிருந்த வேளையில் சுனாமிப்பேரலையானது அவர்களது எதிர்பார்ப்புக்களை மென்மேலும் வீழ்ச்சியடையச் செய்தது. சுனாமியின்போது இந்நெல்வயல்கள் யாவும் கடல்நீரினால் அள்ளுண்டு சென்றன.

றஞ்சித் உட்பட விவசாய அமைப்பினைச்சேர்ந்த ஏனையவர்களும் இதற்கொரு தீர்வுதேடி அரச அதிகாரிகளின் உதவிகளை நாடிச்சென்றனர். அதுவும் செவிடன் காதில் ஊதிய சங்கு போல் மாறியது. எத்தகைய தீர்வும் கிடைக்கப்பெறாத அம்மக்கள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

36 வயதுடைய றஞ்சித்திற்கு இதற்கான ஒரு மாற்றுவழியினைத் தேடுவதற்கு முடியாதிருந்தது. எனினும் அவருக்கு பழையகால நெல் இனங்கள் சிலவற்றைத் தேடிக்கொள்ள முடிந்தது. அவற்றைத் தனது வயலில் பயிரிடுவதற்கு ஆரம்பித்தார். இது சிறந்த பலனைக் கொடுத்தது. அதிக உவர்த்தன்மைக்கு ஈடுகொடுக்கக்கூடிய பழைய நெல்லினங்கள் பல இந்த நாட்டில் காணப்படுகின்றன என்ற உண்மை புலனாகியது. இந்த நெல்லினங்களின் அறுவடை சிறந்த பலனைக் கொடுத்தது. 2005 ம் ஆண்டு ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனமானது தெஹிகஹலந்த விவசாயிகள் 16 பேருடன் இணைந்து மேற்படி நெற்செய்கையை மேற்கொண்டதன் மூலமே இது பற்றிய அனுபவம் இவருக்குக் கிடைத்தது. பாவனையில் காணப்படாத பழைய கால நெல்லினங்கள் 10 வரை தற்போது சிறந்த பலாபலனைத்தருவதோடு அவற்றில் விசேடமாக நான்கு நெல்லினங்கள் அதிக உவர்த்தன்மைக்கு நன்கு ஈடுகொடுக்கக்கூடியன என கண்டறியப்பட்டுள்ளது.

பெரும்பாலும் றஞ்சித்தின் நெற்செய்கை சேதனப்பசளைகள் பாவித்தே மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இரசாயனப்பசளைகள் பாவிப்பது மிகக் குறைவு. இதனால் நெற்செய்கைக்கான செலவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இவ்விசாயிகளின் வருவாயும் பெருகிவருகின்றது. இதுவரை பலபோகங்களிலும் மேற்கொண்ட நெற்செய்கைமூலம் சிறந்த பலன்களைப்பெற்றுள்ள அன்று விலகிச்சென்ற அதிகாரிகளுக்கு றஞ்சித் ஒரு உதாரணமாக விளங்குகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மழையை நாம் எதிர்பார்த்திருந்தாலும் தற்போது எமக்குத் தேவைப்படும் காலங்களில் மழை கிடைப்பதில்லை. மழை பெய்யும்போது அது எல்லை கடந்தும் சென்றுவிடுகிறது. அது தொடர்பாக சாதாரண மக்கள் சில எண்ணக்கருத்துக்களை வைத்திருந்தாலும் காலநிலை வேறுபாடுகள் அவற்றை மாற்றிவிடுகின்றன. இலங்கையில் இப்பிரச்சனை பெரிய அளவில் காணப்படாவிட்டாலும் உலகில் ஏனைய பாகங்களில் இன்று அரசியல் மற்றும் விஞ்ஞானம் போன்ற துறைகளிரண்டிலும் அக்கறை காட்டப்படும் விடயம் ஒன்று இருப்பின் அது உலக காலநிலை பற்றியது தான். கைத்தொழில் பெறுபேறுகள் மேலே மேலே உயர்ந்து சென்றுள்ளது. காபனீரொட்சைட் போன்ற வாயுக்கள் காரணமாக இதுவரை உலகின் காலநிலை பல்வேறு விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டு அதன் பயனாக பல சந்தேகமற்ற பெறுபேறு-களை இதுவரை பெறக்கூடியதாவிருக்கிறது.

இந்த வேறுபாடுகள் இலங்கை மட்டுமல்ல முன்னேற்றமடைந்த அமெரிக்காகூட உணர ஆரம்பித்துள்ளது. நாம் சில வருடங்களுக்கு ஒரு தடவை ?எல் நினோ? தன்மையுடன் காணப்படும் வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற உபத்திரவங்களுக்கு வழமையாக முகங்கொடுத்து வருகிறோம். இந்த சம்பவம் எம்மைத் தாக்குவது சாதாரண காலநிலையில் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு எல்லைக்குள் வெகுவிரைவாக பெரும்பிரபல்யப்படுவதாலேயாகும். இதன் காரணமாக சில குறிப்பிட்ட காலங்களில் உண்டாகும் சிறிய அளவிலான வறட்சி நிலைமையும் பாரிய வறட்சியாக மாறிவிடுகிறது. பொருத்தமான காலங்களில் மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறாவிடின் பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுவிடுகிறது. அமெரிக்காவில் வருட இறுதியில் சாதாரணமாக ஏற்பட்ட சுழல்காற்று விரிவடைந்து ?கத்ரினா? என்ற பாரிய சூறாவளியாக மாறியது யாவரும் அறிவர். எனவே, அசாதரணமாக ஏற்படும் உக்கிர காலநிலை மாற்றங்களை காலநிலை அவதான நிலைய நிபுணர்கள் இனங்கண்டு அறிவிக்கின்றனர். இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களை நோக்குவோமாயின் அவை ஏற்படும் வரை இலங்கையில் பல விசேடமான காலநிலைமாற்றங்கள் காணப்பட்டன. இது பற்றி குறிப்பிடும் எமது காலநிலை அவதான நிபுணர்கள் தெரிவிப்பது யாதெனில், தாம் எதிர்பார்த்ததையும்விட நுவரேலியா போன்ற பிரதேசங்களின் காலநிலை மாற்றங்கள பெரிதும் வேறுபட்டுக் காணப்பட்டன என்பதாகும். இதனால், எம் நாட்டு மழைவீழ்ச்சி மாற்றங்கள் ஏற்படும்போது ஏதாவது பாரிய மாறுதல்கள் ஏற்படுகின்றது என காலநிலை அவதான நிலையம் கூறுகிறது. இதனால் எங்களுக்கு ஏற்படும் காலநில மாற்றங்களின் பாதிப்புக்கள் சிறியன அல்ல. விவசாயம் மற்றும் சுகாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் மிக அதிகமாகும். இதற்குச் சிறந்த உதாரணம் நுவரேலியா ஆகும். நுவரேலியா கிழங்குச்செய்கை மற்றம் மரக்கறி, தேயிலைச் செய்கைக்கு மிக உகந்த காலநிலை கொண்ட பிரதேசமாகும். எனினும் வெப்பநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு உட்பட்ட காலநிலை மாற்றங்களினால் அப்பிரதேச விவசாயம் நன்கு பாதிக்கப்படுகிறது. இம்மாற்றங்கள் இந்நாட்டு விவசாயத்திற்கு மிகுந்த பாதிப்பினை ஏற்படுத்துகிறது என பேராதனை விவசாயபீட இயற்கைவள முகாமைத்துவ நிலையம் நிரூபித்துள்ளது. அத்துடன், எதிர் பார்க்கும் காலங்களில் மழைவீழ்ச்சி காணப்படாத காரணத்தால் இந்நாட்டில் காலபோகப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு முன்னரிலும் பார்க்க தற்போது பாரிய பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்களினால் பாரிய நோய்களும் அதிகரிக்கின்றன. இந்த நாட்டில் கடல் மட்டத்திலிருந்து உயர்ந்த பிரதேசங்களின் உஷ்ணநிலை காரணமாக முற்காலத்தில் நுளம்புத் தொல்லை குறைவாகவே காணப்பட்டது. தற்போது சிந்திக்கமுடியாத அளவு சீதோஷ்ண வேறுபாடுகளின்று சகல பிரதேசங்களிலும் நுளம்பு பெருகுவதற்கு ஆரம்பித்துள்ளது.

இந்த நுளம்புப்பெருக்கத்தினால் ஏற்படும் தொற்று நோய்கள் சகல பிரதேசங்களுக்கும் பரவுவதைத் தடுப்பதற்கான விபரங்களை அறியவேண்டியது அவசியமாகும். அத்துடன் வேறு பல தொற்று நோய்களும் இக்காலநிலை மாற்றத்தினால் அதிவிரைவில் பெருகிவிடுகிறது. இத்தகைய காலநிலை மாற்றங்களினால் இந்த நோய் பரவும் நிலை இரட்டிப்பாகியும் விடுகிறது. வெள்ளப்பெருக்குக்கு முகங்கொடுக்கும் சந்தர்ப்பங்களும்

தொற்றுநோய் பரவலுக்கு மிகவும் உதவிபுரிகின்றன. அத்துடன் எல்லையில்லாமல் ஏற்பட்டு வரும் அனர்த்தங்கள் காரணமாக மக்களின் வாழ்வாதார மார்க்கங்கள் பெரிதும் தடைப்பட்டுவிடுகின்றன. தற்கால உலகில் அனர்த்தங்கள் பற்றி மக்களுக்கு முன்னெச்சரிக்கை முறைமையினை அறியப்படுத்துவது மிக அவசியமானதாகும். கடந்த சுனாமிப் பேரலைத் தாக்கத்தின் பின்னர் இந்த முன்னெச்சரிக்கை முறைமை பற்றி நாம் யாவரும் நாள்தோறும் சம்பாஷித்துக் கொண்டிருப்பது சகலருக்கும் நினைவிலிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

சுனாமி அனர்த்தம் சம்பந்தமாக ஓரளவு உயர் தொழில்நுட்பம் தேவைப்படுகிறது என்பதை அறிந்திருந்த எமக்கு அடிக்கடி ஏற்பட்டுவரும் அனர்த்தங்களாகிய வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற சம்பவங்களின்போது உரிய மாற்றுநடவடிக்கைகள் மூலம் வினைத்திறனுடனான முன்னெச்சரிக்கை முறைமை ஒன்றினை எமக்கு ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்பதை எமது பிராந்தியத்திலேயே நிரூபித்துக்காட்டப்பட்டுள்ளது. இந்த உதாரணம் பாகிஸ்தானிலிருந்தே அறியக்கூடியதாவிருந்தது. அதுவும் வெள்ளப்பெருக்கு சம்பந்தப்பட்டதே. பாகிஸ்தானில் கம்றா பிரதேசமே வெள்ளப்பெருக்கினால் மூடப்பட்டுவிடுகிறது என பிரதேச நிர்வாகிகளிடமிருந்து அறியமுடிகிறது. கிராமத்திற்குள் செல்லும் வீதிகள் பல தடவைகள் நீரில் மூழ்கிவிடுவதால் வருடந்தோறும் இக்கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுவிடுகிறது. இதற்கு மாற்றுவழியைத் தெரிவுசெய்யும்பொருட்டு ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனம் அந்நாட்டிலுள்ள டோபா நிறுவனத்துடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவத் திட்டமொன்றினை ஆரம்பித்தது. இக்கிராமம் அடிக்கடி தனிமைப்படுத்தப்பட்டுவிடுவதால் அம்மக்களின் உற்பத்திப்பொருட்கள் சந்தைப்படுத்துவது, பாதுகாப்பான இடங்களுக்கு அவர்கள் இடம்பெயர்வது போன்ற பாதிப்புப் பிரச்சனைகள் காணப்படுவதால் கிராமத்திற்கு ஒரு பாலம் அமைக்கப்படவேண்டும் என முதலில் பிரதானமாகக் கருதப்பட்டது. இந்த அமைப்பினால் வெள்ள அனர்த்தங்களின்போது நகரங்களுக்கிடையேயான தொடர்பு ஏற்பட்டது. முன்னெச்சரிக்கை நடவடிக்கை அயலிலுள்ள ஆலயங்களிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்காக பொறுப்பு வாய்ந்த நபர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். பொறுப்பு வாய்ந்த நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி நதிகளின் நீர்மட்டம், மழை மற்றும் காற்றின் வேகம் என்ற தகவல்களைத்திரட்டி அந்த தரவுகளினடிப்படையில் பாதிப்புற்ற மக்களுக்கு முன்னெச்சரிக்கை முறைமை மூலம் தெரியப்படுத்தலே அவர்களின் கடமையாகும். இத்தகைய வெள்ள அபாயங்களின்போது ஆலயங்களில் ஒலி எழுப்பும் கருவிகளை அமைத்து அதன்மூலம் மக்களுக்கு முன்னெச்சரிக்கை முறைமை மூலம் விழிப்படையச்செய்கிறார்கள். தற்போது கம்றா மக்களும் தமக்குத்தாமே தங்கள் பயிர்ச் செய்கைக்கு ஏற்படும் பாதிப்புக்களை இந்த நடைமுறைகள் மூலம் தவிர்த்துக்கொள்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நேபாளத்திலும் பாகிஸ்தானிலும் பின்பற்றப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை முறைமை



நேபாளத்தில் அனர்த்த முகாமைத்துவ முறைமை மிகவும் சிறிய விடயமாகும். மலைப்பிரதேசங்களைக் கொண்ட நேபாளத்தில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்படும் கால அளவு இதுவரை அதிகரித்தே காணப்படுகிறது. சித்வான் பிரதேசம் இத்தகைய அனர்த்தங்கள் ஏற்படும் பிரதேசமாகக் காணப்படுவதால் ஐ.ரி.டி.ஜீ (நேபாளம்) இந்த அனர்த்தத்தைக் குறைப்பதற்கு ஒரு உபாய மார்க்கமாக அனர்த்த முன்னெச்சரிக்கை முறைமையை ஏற்படுத்தியுள்ளது. பிரதேசத்தின் ஒரு உயர்ந்த இடத்தில் ஒரு தூண் அமைக்கப்பட்டு அங்கிருந்து தமது அறிவு மற்றும் அனுபவத்துடன் கருவி ஒன்றினைப் பொருத்தி மின்சாரம் மூலம்(பற்றி) நடைமுறைப்படுத்திவருகிறது.

அனர்த்த நிலைமைகளில் ஏற்படக்கூடிய தொடர்பாடல்களுக்கேற்ப இயங்கிவருகிறது. இதில் பிரதான விடயம், சிபார்சு செய்யப்பட்ட தூண் அமைத்து அதில் ஒலி எழுப்பும் கருவி பொருத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவருதல் ஆகும். இந்தத் தூணை அமைக்கும் இடத்தைத் தெரிவு செய்வது அப்பிரதேச மக்களாகும். நதிகள் நன்றாகப்பாயும் இடமாகிய றோயல் சித்வான் நகரில் அரும்பொருட்காட்சிச் சாலைக்கு அருகிலேயே இது அமைக்கப்பட்டது. இதனால் அரும்பொருட்காட்சிச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பாதுகாப்பு உதவிகளும் கிடைத்தன. இந்த தூண் அமைக்கப்பட்ட பிரதேசம் மிருகங்கள் வந்து போகும் இடமாகக் காணப்பட்டதால் உல்லாசப் பிரயாணிகளும் கவரப்படுவது இதனை மேம்படுத்துவதற்கு ஏற்ற நிலைமையை ஏற்படுத்தியது. நதிகள் பெருகுதல், அதிக

மழை போன்ற காலங்களில் சிறந்த முன்னெச்சரிக்கை முறைமை நடைமுறைப்படுத்தப்படுவதால் அனர்த்தங்கள் சில தவிர்க்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலைமைகளில் எங்களுக்கும் எங்கள் அனுபவத்தினூடாக ஏற்படுத்தப்பட்ட சிறந்த அனர்த்த முன்னெச்சரிக்கை முறைமையை மேற்கொள்வதன் பொருட்டு சிந்திப்பதற்கு ஏற்ற காலம் அல்லவா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்தங்களை தடுத்துக் கொள்ள முடியுமா



## இடர் மற்றும் அனர்த்தம் என்பது ஒன்றல்ல இரண்டாகும்.

நாம் எப்போதும் இடர்களுக்கும் பேராபத்து எனப்படும் அனர்த்தங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம். மறக்கமுடியாத கொடூரம் நிறைந்த சம்பவமாக 2004ம் ஆண்டில் பாரிய அழிவுகளை உண்டுபண்ணிவிட்டுச் சென்ற சுனாமி பேரலையைக் குறிப்பிட முடியும். இந்த நிகழ்வானது இலங்கைக்கு மட்டுமல்ல முழு உலகத்திற்கும் பேராபத்துக்கள், இடர்கள் தொடர்பாக மக்களை விழிப்படையச் செய்துள்ளது. அனர்த்த முகாமைத்துவம் பற்றி முன்னொருபோதும் இல்லாதவாறு பேசுவதற்கும், சிந்திப்பதற்கும் இது போன்ற பேராபத்தொன்றை தடுப்பது தொடர்பான நடவடிக்கைகளையும் சிந்திக்கவைத்துள்ளது.. இந்த விடயங்கள் ஊடாக அனர்த்தங்களைத் தடுப்பதுமற்றும் இடர்முகாமைத்துவம் என்பன பற்றி மக்கள் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக செயல்பட வைத்தது.

சமூகத்தின் இந்த வெளிப்பாடு உலகில் பல மக்களை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக புதிய கோணத்தில் சிந்திக்க வைத்தது. இதன் ஊடாக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக பலதரப்பட்ட விடயங்கள் பற்றி சிந்திப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள வெளிப்பாடுகளையும் அது தொடர்பான விடயங்களையும் ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வுலகம் இந்த விடயம் தொடர்பாக எவ்வாறு நோக்குகிறது என்பது முக்கிய விடயமாகும். அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட நிபுணர்களது கருத்துக்களின்படி ஆபத்து பேராபத்தாக உருவாகிறது. குறிப்பாக இவ்வாறான துன்ப நிகழ்வுகளுக்குள் அனர்த்தம் என்பதற்கும் பாரிய வித்தியாசங்கள் இல்லையாயினும் அனர்த்த முகாமைத்துவத்தின்போது இச் சொற்பதங்களுக்கு இடையில் கவனிக்க வேண்டிய வித்தியாசங்கள் உள்ளன.

அதாவது பேராபத்து என்பது இயற்கையுடன் சம்பந்தப்பட்டது. ஆனால் இடர் என்பது மாறுபட்டது. மனிதர்களின் அழுத்தங்களே இம்மாற்றங்களுக்கு காரணமாகவும் அமைந்துள்ளன.


இயற்கையாக ஏற்படும் அனைத்து நிகழ்வுகளின்போதும் இழப்புகள் ஏற்படலாம். குறிப்பாக சூறாவளி பேராபத்தை தரவல்லது. அதனால் வீடுகளுக்கு பாதிப்பு ஏற்படும்போது அது இடராக கருதப்படுகிறது. மனிதர்களுக்கும் விலங்கினங்களுக்கும் உயிர்கள் மற்றும் உடைமைகளுக்கு அழிவை உண்டுபண்ணும்போது அது பேராபத்து எனப்படுகிறது.

### அனர்த்தநிலை

தெற்காசிய நாடுகளின் அனர்த்தம் சம்பந்தப்பட்ட அறிக்கையொன்றிற்கு அமைய அநேகமானோர் பேராபத்தின் தன்மையை நிர்ணயிப்பது அங்குள்ள விஞ்ஞானரீதியான அளவுகோளின் பெறுமானத்திற்கு அமையவேயாகும். நிலநடுக்கத்தை ரிச்ரர் அளவிலும் குறிப்பிட்ட ரிச்ரர் அளவின் கூடுதல் தன்மையை பூகம்பம் எனவும் தொடர்பு சாதனங்கள் குறிபபிடுகின்றன. வெள்ள நிலைமையின்போது அதன் தன்மையை நிமிடத்திற்கு பெருக்கெடுக்கும் நீர்மட்டத்தின் அளவுகேற்ப அளக்கப்படுகிறது. இங்கிலாந்திலுள்ள அனர்த்தம் சம்பந்தப்பட்ட ஆய்வாளர் ஒருவாரான ஜோன்டிவிக் என்பவர் ?அனர்த்த நிலைமையொன்றை அதன் பெறுமானத்தைப் பொறுத்து அளவிட முடியாது என்றும் அச்சந்தர்ப்பத்தில் மக்களுக்கும் அவர்களின் உயிர்களுக்கும் மற்றும் உடைமைகளுக்கு ஏற்படும் அழிவுகளைப் பொறுத்தே பாதிப்பின்தன்மை கணிக்கப்படுகிறது எனக்குறிப்பிட்டார். குறைந்த ரிச்ரர் அளவில் பூகம்பம் ஒன்று ஏற்படும்பட்சத்தில் பாரிய அழிவுகளை எதிர்கொள்ள வேண்டிவந்தால் அந்த நிலைமையை பேரழிவாக கருதமுடியும். மனிதர்கள் வாழமுடியாத பகுதியொன்றில் ஏற்படும் பூகம்பம் அல்லது சூறாவளி எந்தளவு அகோரத்தன்மையுடன் ஏற்படுமாயினும் அதனால் யாருக்கும் அனர்த்தங்கள் எதுவும் இடம்பெறாத பட்சத்தில் அதனை இடராககூட கருதமுடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இடர் வெளிப்பாடு

அநேகமான அனர்த்தங்களுக்கு பிறப்பிடமாக அமைவது இடர்களாகும். அதனால் இடர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் அடையாளம் கண்டுகொள்வது மிக முக்கியமானதாகும். இங்கே இயற்கையில் ஏற்படும் அழிவுகளை பல்வேறு வகையில் அடையாளம் காணலாம். சில அழிவுகள் நொடிப்பொழுதில் உருவாகி சில நிமிடநேரங்கள் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தும் வேறுசில அழிவுகள் நீண்டகாலமாக உருவாகி திடீரென வெளிப்படும். இவ்வாறானவற்றின் பின்னால் ஏற்படும் இழப்புகளும் பேராபத்துக்கள் வரை கொண்டு செல்லும்.
குறிப்பாக பூகம்பம் சம்பந்தமாக நீண்டகால எதிர்வுகூறல்களை முன்வைக்க முடியாது. சுனாமி நிலைமையும் இதற்கு சமமான-தாகும். இவை திடீரென உருவாகும் அழிவுகள். அனர்த்த பேராபத்து ஏற்படுவதற்கு அதிக நேரம் செல்லாது. ஆனாலும் வருடந்தோறும் ஏற்படும் டொனாடோ மினி சூறாவளி போன்ற நிகழ்வுகள் சில காலம் காற்றுமண்டலத்தினூடாக உருவாகி ஆபத்தை ஏற்படுத்தும். உரிய அனர்த்த முகாமைத்துவம் ஒன்று பின்பற்றப்படுமாயின் இவ்வாறான சூழ்நிலைகளுக்கு, முன் எச்சரிக்கையுடன் ஆயத்தமாகி பேராபத்தாக அது மாறுவதை தடுத்து விபத்து நிலைமையொன்று உருவாவதனைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியும். அனர்த்த முகாமைத்துவத்தின்போது வறட்சியும் விபத்தாகவே கொள்ளமுடியும். வறட்சியின்போது ஏற்படும் உயிர்கள் உடைமைகளுக்கான சேதங்கள் மட்டுப்படுத்தப்படும். ஆயினும் அது நீண்டகால வறட்சியாக தொடரும்போது விவசாயத்தை பாதிப்படையச் செய்யும். குடிநீர் தேவைகள் தடைப்படும். அதனூடாக உயிர்கள் உடைமைகளுக்கான இழப்புகள் அதிகமாக காணப்படும். நம் சமுகத்தில் இடர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அக்கறை செலுத்துவதில் அதிக ஈடுபாடு இருப்பதாக இன்னும் வெளிப்படவில்லை. இடர் நிலைமையொன்று தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவது, அது பாரிய அழிவுகளை ஏற்படுத்திய பின்னராகும். சம்பவமொன்று நடந்து முடிந்த சில காலங்களில் நாம் அனைத்தையும் மறந்துவிடுகிறோம். இந்த நிலைமை அனர்த்த முகாமைத்துவத்தின்போது சமுகம் பின்னடைவை நோக்குவதற்கு முக்கிய காரணியாக இருப்பது தற்போது அனர்த்த முகாமைத்துவ நிபுணர்களினால் அறிந்து கொள்ளப்பட்டுள்ளது. இதனால் எப்போதும் செயல்படுத்தக்கூடிய உரிய அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அத்தியாவசிய தேவை அனைத்து நாடுகளிலும் பின்பற்றப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நாவலப்பிட்டி மண்சரிவு



இது அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்படும் ஒரு கிராமத்தில் வாழும் சமூகங்களினதும் அவர்களது வாழ்க்கைமுறை தனியான ஒரு முகாமைத்துவ நடைமுறையினால் எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதையும் எடுத்துக் காட்டும் கதையாகும். நாவலப்பிட்டி நகரத்திலுள்ள சொய்சாககலை கிராமமானது மக்கள் தமது வீடுகளுக்குச்செல்ல விரும்பும் கிராமமல்ல. ஏராளமான மண்சரிவுகள் அந்தக் கிராமத்தை ஏற்கனவே மனிதவாழ்க்கைக்குப் பாதுகாப்பற்ற இடமாக மாற்றியுள்ளன. வறுமை, வாழ்வதற்கு வேறு இடமில்லாமை மற்றும் வெள்ளப்பெருக்கினால் வீடுகளை இழந்த வேறு பிரதேச மக்கள் குடியேறியுள்ளமை காரணமாக மலைச்சரிவுகளில் இம்மக்கள் வீடுகளை அமைத்துள்ளனர். மலைச்சரிவுகள் படிப்படியாக மகாவலி ஆற்றினுள் நகர்ந்து சென்றுகொண்டிருந்தது. மலை அடிவாரத்திலுள்ள வீடுகள் சேதமடைந்துள்ளதால் அம்மக்கள் தமது உடமைகளையும் புகலிடங்களையும் இழந்துள்ளனர்.

இந்த மலைச்சரிவுகளில் வாழ்ந்துவரும் மிக ஏழை மக்கள் சில தீர்வுகளை வேண்டி இருந்து நின்றனர். அந்த வேண்டுகோளானது ஒரு தனியான வடிகாலமைப்பாகவேயிருந்தது. அப்போதைய நகர சபையின் அக்கறை காரணமாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பிராக்டிக்கல் ஆக்சன் நிறுவனங்களின் அனுபவங்கள் வாயிலாக இந்தக் கருத்திட்டம் பாரிய வெற்றியடைந்துள்ளது. அவ்வூர் மக்கள் தமது காலம், தொழில் பணம் போன்றவற்றை நல்கியதோடு தமது செலவிலேயே அந்த வடிகாலமைப்பினை பராமரித்து வருகின்றனர். தற்போது கொங்கிறீற்றினாலான சிறந்த வடிகாலமைப்பு காணப்படுவதால் மலைகளில் நீர் கசியாததன் காரணமாக மலைச்சரிவுகள் ஓரளவுக்கு கெட்டியாக மாறியுள்ளன. வடிகாலுக்கு மேற்பாகத்தில் கட்டிடங்கள் அமைத்தல் மற்றும் மலைச்சரிவுகளை வெட்டுதல் மூலம் ஏற்படும் ஆபத்துக்கள் பற்றி மக்கள் சிறந்த விழிப்புணர்வுடன் இருக்கின்றனர்.

நலிவுறுந்தாக்கத்தை எவ்வாறு சிறந்த அந்தஸ்துக்கு மாற்றமுடியும் என்பதற்கும் சிறந்த முகாமைத்துவம் மூலம் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் அனர்த்தங்களை எவ்வாறு தடுக்கலாம் என்பதற்கும் இது ஒரு உதாரணமாகும்.



# மார்கழி 26

# ஒரு துக்க தினமல்ல

சரண்டுகளுக்கு முன்னர் சுனாமி வந்தது இந்த நினைவு இலங்கை மக்களின் மனங்களில் பரம்பரை பரம்பரையாக நிலைப்பதற்குக்காரணம், சுனாமித் தாக்குதலால் 38000 மக்களின் உயிர் காவு கொள்ளப்பட்டு நின்றது என்பதாகும்.

அத்துடன் உக்கிரமான சுனாமிப் பேரலை ஏற்படுத்திய பாதிப்புக்கள் சொல்லில் அடங்கா. இதனால் பறிய அவலங்களைக் கொண்டுவந்த சுனாமித் தினத்தை தேசிய துக்கதினமாக ஏன் அனுஷ்டிக்கக்கூடாது என்ற வினா உங்களுக்கு நன்கு புலப்படும். இது பற்றிய சிறு விளக்கம் தருவதே எமது குறிக்கோளாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அனர்த்தங்கள் பற்றி அறிந்திராமை

சுனாமியின்போது பாரிய அனர்த்த சம்பவங்கள் ஏற்பட்டதற்குக் காரணம் எமது சமூகத்தில் சுனாமி பற்றிய போதிய அறிவு காணப்படாமை என்பது இரகசியமான விடயமல்ல. 2004 ற்கு முன்னர் வரலாற்றிலேயே தமக்கு சுனாமி அனுபவம் ஒன்று இருக்கவில்லை என்று பலரும் எண்ணுவதே இதற்கான காரண- மாக அமைகிறது. இயற்கை அனர்த்தங்கள் பற்றி நாம் அறிந்திராமைக்குக் காரணம் யாது? வெள்ளப்பெருக்கு, வறட்சி, மண்சரிவு, கடலரிப்பு, சுழல்காற்று, சூறாவளி போன்ற எமது நாட்டிற்கு நிரந்தரமாக அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் இயற்கை அனர்த்தங்கள் பற்றி அறிந்திருப்பவர்கள் எமது சமூகத்தில் எத்தனை பேர்? இத்தகைய அனர்த்தங்களின்போது நிரந்தரமாக ஏற்படும் சேதங்களைக்குறைப்பதற்கு முடியாமைக்குக் காரணம் அது பற்றிய அறிவு இல்லாமை ஒரு பாதகமான விடயமல்லவா? சுனாமி காரணமாக இயற்கை அனர்த்தங்கள் பற்றி முன்னர் அறிந்திராத பல விடயங்களை அறிவதற்கு முயற்சித்து வருகிறோம். இது ஒரு சிறந்த செயற்பாடாகும். அனர்த்தங்களுக்கு முகங்கொடுப்பதுடன் மட்டும் நிறுத்திக்கொண்டிருந்த நாம் தற்போது அனர்த்தங்களால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பது தொடர்பாகவும் முன்னாயத்தங்கள் பற்றியும் உரையாட ஆரம்பித்துள்ளோம். ஆயினும், இரண்டு ஆண்டுகளில் செய்யவேண்டியனவற்றைச் செய்துமுடித்துள்ளோமா? பாடசாலை பாடவிதானங்களிலும் அனர்த்தங்கள் தொடர்பான விடயங்களைச் சேர்ப்பதற்குரிய செயற்திட்டங்கள் இன்னமும் நிச்சயப்படுத்தப்படவில்லை. நடைமுறையிலுள்ள திட்டங்களும் மந்தமானவையே. அதற்கு ஒரு குறிக்கோளோ அல்லது காலவரையோ கிடையாது. பாடசாலைகள் ஊடாக மிகச்சிறந்த முறையில் பல வசதிகளுடன் அனர்த்தங்கள் பற்றிய அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு வழிகளிருந்தும் உரிய பொறுப்புக்களை நாம் மேற்கொள்ளாதது ஏன்?

ஊடகங்கள் மூலம் இயற்கை அனர்த்தங்கள் பற்றி மக்களுக்கு அறியப்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய பங்களிப்புக்கள் யாவை? பாடக, பாடகிகள், நாட்டிய விற்பன்னர்கள் மற்றும் சங்கீதக் குழுவினரைத் தெரிவு செய்வதில் ரூபவாகினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற நிறுவனங்கள் செலுத்திவரும் ஊக்கமும் உற்சாகமும் மண்சரிவு, வெள்ளப்பெருக்கு அல்லது வறட்சியினால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் காட்டாதது ஏன்? இத்தகைய அனர்த்தங்கள் ஏற்பட்டதன் பின்னர் மட்டும் பாதிக்கப்பட்ட மக்களின் துயரக்கண்ணீர் மற்றும் இறப்புக்கள் பற்றி அவர்களுக்கு ஞாபகப்படுத்துவது ஏன்?





## அனர்த்த முன்னறிவித்தல்

சுனாமிக்குப் பின்னர் பலர் இந்த நாட்டிற்கு ஏற்பட்ட ஒரே ஒரு இயற்கை அனர்த்தம் சுனாமிப் பேரலையே என நினைத்து நடவடிக்கைகள் எடுத்தார்கள் ஆனால் அரச மற்றும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் மூலம் அனர்த்தங்கள் பற்றி கவனஞ்செலுத்துவதற்கும் அது தொடர்பான நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கும் நிதி முதலீடு செய்வதனையும் காணக்கூடியதாவிருந்தது. இரண்டு ஆண்டுகளில் இந்த நிறுவனங்கள் இன்னமும் நடவடிக்கை மேற்கொள்ளாமை பற்றி சிலர் வினவியபோதும் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படும் பொருளாதார மற்றும் விஞ்ஞான அறிவினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இத்தகைய பிரயோகத்திற்கான முரண்பாடுகள் ஏற்படுகின்றன என நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.அனர்த்த முன்னறிவித்தல் நிலையங்களில் பிரச்சனைகள் காணப்படுவதில்லை. அத்தகைய நிலையங்களிலிருந்து வழங்கப்படும் அனர்த்த அறிவித்தல்கள் மக்களுக்குச் செல்கிறது. இதுபற்றி இன்னமும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை. அனர்த்தமுகாமைத்துவ நிலையத்துடன் ஒப்பீட்டளவில் தகவல் பங்கீடு நடவடிக்கையும் கீழ் நோக்கிச் சென்றுகொண்டிருப்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இதன்பொறுப்பு அரசினால் மட்டும் ஆரம்பிக்கமுடியாது. சிவில் சமுதாயத்தின் பொறுப்பானது மக்களுக்குப் பொருத்தமான நீண்டகால நடைமுறைக்குட்படுத்தக்கூடிய தவறில்லாத சிறந்த தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை வழங்குதலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## சமூக ஈடுபாடு

மண்சரிவு அனர்த்தங்கள் பற்றி தயாரிக்கப்பட்ட செயற்றிட்டமானது அனர்த்த ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்வதற்கு எமது சமூகம் காட்டும் பொறுப்புக்கள் சம்பந்தமாக சிறந்த கருத்துக்களை எடுத்துக்காட்டுகின்றது.


இச்செயற்றிட்டத்தைத் தயாரித்த தினத்திலேயே சம்பந்தப்பட்ட உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு இந்தக் கட்டமைப்புப் பற்றி அறியக்கிடைத்தது. ஆயினும், அத்தகைய கட்டமைப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது எப்போது? அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கும் பிரதேசங்களில் எதுவித பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததோடு புதிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்குக் காரணம் யாது? இத்தகைய கட்டமைப்புக்கள் இருப்பது பற்றியும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் குழுவினர்அறிநதிராமலிருப்பது ஏன்? நாட்டில் தேசிய காணிப் பாவனைக் கொள்கை இல்லாதது ஏன்? இந்தப் பிரச்சனைகள் இவ்வாறு தொடரும்வரை அனர்த்த முகாமைத்துவத்தை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான சட்டதிட்டங்கள், நிறுவன செயற்றிட்டம், திட்டமும் கொள்கையும், அரசியல் விருப்பு முதலிய யாவும் இங்கே காணப்படா.

சுனாமி அனர்த்தங்களிலிருந்து மீள்வதற்கு எடுக்கவேண்டிய, எடுக்கவிருக்கும் புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளில் எவ்வளவு முரண்பாடுகள் காணப்படுகின்றன? தகுதியில்லாததும் அவசியமற்றதுமான நிவாரணங்கள் கிடைக்கப்பெறும் அதேவேளை தகுதியானவர்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் கிடைப்பதில்லை எனவும் குற்றச்சாட்டுக்கள் பெருந் தொகையில் காணப்படுகின்றன.

களவு, இலஞ்சம் மற்றும் சுரண்டல் பற்றி பல புகார்கள் காணப்படுகின்றன.ஆயினும், அது பற்றி உரியமுறையில் விசாரணை செய்வதோ அல்லது தவறிழைத்தவர்களுக்கு தண்டனை விதிப்பதோ அல்லது சரி, பிழையை ஆராய்ந்து பார்ப்பதோ இடம்பெறுவதில்லை? அனர்த்தங்களின் பின்னர் இத்தகைய நிலைமையைத் தவிர்ப்பதற்கு சமூகம் என்ற வகையில் நாம் எத்தகைய சிறந்த அமைப்பாக விளங்குகிறோம்?




ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் அனர்த்தம் தொடர்பான முன்னெச்சரிக்கைத் திட்டம்.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





## எதிர்கால நோக்கு

யாவும் சிறந்த யில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றனவா எனச் சிநதிப்பதும் சில நேரங்களில் தலைசிறந்த மதிப்பீடாக அமைந்துவிடுகின்றது. விசேடமாக 2004 ல் ஏற்பட்ட சுனாமி போன்ற அனர்த்தங்களுக்குப் பின்னர் இவ்வாறான அனர்த்தங்களுக்கு முகங்கொடுகத்தல் மற்றும் எதிர்கொள்ளுதல் பற்றிய அனுபவம் குறைந்த சமூகம், புனர்நிர்மாண மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளில் எதுவித முரண்பாடுகளுமின்றி நடைபெறவேண்டுமெனச் சிந்திப்பது முக்கியமாகும். இதில் பிரதானமானது யாதெனில், ஏற்பட்ட தவறுகளிலிருந்து பாடங்கள் கற்று இத்தகைய தவறுகள் பற்றிச் சிந்திப்பதற்கு இருக்கும் பிரச்சனைகளாகும். தவறுகள் பற்றிச் சிந்திப்பதால் சிறந்த நடைமுறைத் திட்டங்கள் பற்றி சகலருக்கும் அறியச் செய்யமுடியும். இத்தகைய பாடத்தின் மூலம் எதிர்கால சந்ததியினருக்கும் பாடம் கற்பிக்க முடிகிறது. பிரதிகூலங்களைக் குறைத்து அனுகூலங்களை அதிகரிப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது.

இவை யாவும் செயற்படுத்துவதற்கு எதிர்காலம் பற்றிய நோக்கு அவசியமாகிறது. கடந்து சென்ற 02 ஆண்டுகளை பின்னோக்கிப் பார்ப்போமாயின் இலங்கை அரசாங்கத்திற்கு அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமாக சில அனுபவம் இருப்பது காணக்கூடியதாகவிருக்கிறது. ஹியுகோ அமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குதல், 2005 அனர்த்த முகாமைத்துவ விதிகளை அமுல்படுத்துதல், அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஒன்றினை அமைத்தல், பத்து ஆண்டு அனர்த்த மார்க்க கட்டமைப்பு ஒன்றினை ஏற்படுத்துதல்அனர்த்த முகாமைத்துவ அமைச்சு ஒன்றினை அமைத்தல் என்பன இதற்கான சான்றுகளாகும்.இதில் காணப்படும் குறைகளை நிவர்ப்பிப்பதற்கு சிவில் சமூகம் கடமைப்பட்டிருக்கிறது. எனினும், இது தேசிய பொறுப்பாக ஏற்று செயலாற்றுவதற்கு சிவில் சமூகத்திற்கு அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமாக முன் நோக்கு இருக்கின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org





## எதிர்காலத்திட்டங்கள்

- தேசிய அனர்த்த முகாமைத்துவம் மற்றும் அவசர காலத் திட்டங்கள் தயாரித்தல்

- அனர்த்த முகாமைத்துவ நிலையம், சுனாமிக்கு முன்னரான அனர்த்த அறிவித்தல் நிலையம், சகல அனர்த்தங்கள் பற்றி முன்னெச்சரிக்கை விடுக்கும் நிலையங்கள், தேசிய தரவுகள் சேகரிப்பு மற்றும் பதிவு செய்தல் நிலையம் போன்ற நிலையங்களை ஒரு நிலையமாக ஒருங்கிணைத்து வாரத்தில் எல்லா நாட்களிலும் 24 மணித்தியாலமும் திறந்திருத்தல்.

- இந்த நிலையத்தை மாவட்ட செயலாளர் காரியாலயம், மாகாண சபை, பிரதேச செயலர் காரியாலயம், பிரதேச சபை மற்றும் கிராமியக் குழுக்களுடன் இணைத்தல்.

- தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளை பின்பற்றுதல்

- கிராமிய மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவத்தை சுயாதீன மாக அமுல்படுத்திவரும் குழுக்களை அமைத்தல் மற்றும் அனர்த்த சந்தர்ப்பங்களில் அதன் சேவையைப் பெற்றுக்கொள்ளுதல். அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமான அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துதல்.

- மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகள், தனியார் துறை, அரச , அரச சார்பற்ற நிறுவனங்களுக்கிடையே ஒரு அரச நிர்வாக கட்டமைப்புடன் சிறந்த தொடர்பினை ஏற்படுத்துதல்.

- தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் சம்பந்தப்பட்ட நபர்கள் மூலம் சாதாரண மக்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அனர்த்த முகாமைத்தும் பற்றி அறியச் செய்தல்.

- அவசரகால நிலை தொடர்பாக அறிவித்தல் கொடுப்பது பற்றி கிராமிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் விசேட தொழில்நுட்பக் குழுக்களை அமைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# ஜன தாக்ஷன செய்திகள்

நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியின் பொருட்டு பொருத்தமான தொழில்நுட்பப் பாவனை சம்பந்தமான ப்றக்டிக்கல் எக்சன் நிறுவனத்தின் காலாண்டு செய்திமடல்
2006 - பகுதி - 2 தொகுதி 4

ITDG நிறுவனம் நாற்பது வருடங்களுக்கு முன்பிரித்தானியாவில் ?சிறியது அழகானது? என்ற நூலின் ஆசிரியர் திரு.ஈ.எவ் சூமாக்கர் என்ற அறிஞரால் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது இந்த நிறுவனம் பங்களாதேஷ், கென்யா,நேபாளம், பேரு, இலங்கை,சூடான்,ஸிம்பாப்வே போன்ற ஏழு நாடுகளுக்கு தனது பணியை வியாபித்துள்ளது. ITDG நிறுவனத்தின் புதிய பெயர் ப்றக்டிக்கல் எக்சன் என்பதாகும்.

வறுமையும் அநீதியுமற்ற உலகத்தில் யாவரின் நன்மைக்குமான தொழில்நுட்ப பிரயோகம் என்ற குறிக்கோளுடன் இயங்கிவரும் ப்றக்டிக்கல் எக்சன் (ITDG) நிறுவனம், தொழில்நுட்பத்துடன் இல்லாமல் மக்களுடன் ஆரம்பியுங்கள் என்ற உன்னதமான அணுகுமுறையைக் கொண்டுள்ளது. இதன் கருவிகள் இலகுவானவை. தொழில்நுட்பத்தை தமது வசதிக்கேற்ப பின்பற்றிவரும் கிராமிய மக்களுக்கு நீடித்து நிலைத்து நிற்கும் பொருத்தமான. நடைமுறை விடைகளை வழங்கிவருகின்றது.

ப்றக்டிக்கல் எக்சன் (ITDG) நிறுவனம், சரியான எண்ணங்கள் சிறியவை-வயாயினும் வாழ்க்கையை மாற்றக்கூடியவை என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளது. தொழில் வாய்ப்புக்கள், சுகாதார மற்றும் ஜீவனோபாயங்கள் மற்றும் சிறந்த வாழ்க்கைமுறை என்பனவற்றை வழங்குகின்றன. 1966 ம் ஆண்டிலிருந்து வறிய மக்கள் தமது எதிர்காலத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கான திறனையும் தொழில்நுட்பத்தையும் மேம்படுத்துவதற்காக அவர்களுடன் இணைந்து பணிபுரிந்து வருகின்றது.

ஜீவனோபாயம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகளில் உதவி வழங்கக்கூடிய தேசிய மற்றும் கிராமிய திட்டங்களில் சமூகத்தின் எண்ணங்களையும் பங்களிப்பினையும் முக்கியப்படுத்துவதனை உறுதிப்படுத்துவதற்கு ப்றக்டிக்கல் எக்சன் (ITDG) நிறுவனம் முயற்சித்து வருகிறது.

**ப்றக்டிக்கல் எக்சன்**
இல. 5, லயனல்
எதிரிசிங்க மாவத்தை
கொழும்பு 5

தொ.பே : 011 - 2829412
தொ.ந : 011 - 2856188
மின்னஞ்சல் : srilanka@practicalaction.org.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.practicalaction.org www.janathakshan.org